விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, மார்கழி வ 20வெள்ளி (10-1-69) ஷவ்வால் 27 புத்தகம் 23 இதழ் 12




## வவுனியாத் தொகுதி சிங்களமயமாகிறது: எம். பி. என்ன செய்கிருர்?

வவுனியாத் தொகுதி சிறுகச் சிறுகச் சிங்களமயமாகி வருகிறது. அத்துமீறி சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுவருகிறது. இதைத்தடுத்து நிறுத்தாமல் வவுனியா எம். பி. என்ன செய்கிருர்?

—இவ்வாறு கேட்கிருர்கள் வவுனியாத் தொகுதி தமிழ் பேசும் மக்கள். வவுனியாத் தொகுதியிலுள்ள ஓதியமலை காணிப் பங்கீட்டுத் திட்டத்திற்கு 'ஆரியபுர' என்று சிங்களப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதியில் சிங்களவரைக் குடியேற்றி அவற்றுக்கு சிங்களப் பெயரைச் சூட்டுவது தமிழ்ப்பகுதியை சிங்களமயமாக்கும் சூழ்ச்சித் திட்டம்என்று வவுனியாத் தொகுதி தமிழ் மக்கள் கருதுகிருர்கள்.

தமிழ்ப் பிரதேசத்திற்கு சிங்களப் பெயர் சூட்டப்பட்டுள்ள சம்பவம் இப்பகுதி மக்களிடையே மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

'எமது தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அடுத்த தேர்தலுக்காக இப்போதே வாக்குக்கேட்கத் தொடக்கி விட்டார். ஆனுல் தமிழ்ப் பிரதேசம் சிங்கள மயமாகுவதைத் தடுத்து நிறுத்த அவர் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. பண்டாரவன்னியனின் வீரப்புகழைத் தேர்தலுக்காகப் பாடிப் பயனில்லை. வவுனியா மக்கள் ஒவ்வொருவரும் பண்டாரவன்னியர்களாக மாறி அடுத்த தேர்தலில் துரோகிகளை விரட்டியடிக்கவேண்டும்' என்று உணர்ச்சிபொங்க தெரிவித்தார் ஒரு வவுனியா தமிழன்பர். வவுனியா உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழ் அரசாங்க ஊழியர்கள் எருவமில்லையென்றும், இதுபற்றி வவுனியா எம். பிக்கு முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் இப்போது கிளிநொச்சி எம். பி. நடவடிக்கையெடுத்து வருவதாயும் அவ்வன்பர் தெரிவித்தார்.

'ஆரியபுர' என்ற சிங்களப் பெயரை 'சிவபுரம்' என மாற்றியமைக்க வேண்டுமெனவும், சிங்களக் குடியேற்றத்தை தடுத்துநிறுத்த வேண்டுமெனவும், தமிழரசுச் செயற்குழுவிடம், தமிழரசு நெடுங்கேணிக்கிளைச் செயலாளர் திரு. பீற்றர் பொன்கலன்ட் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

# "தமிழினத் துரோகிகளுடன் ஒரு போதுமே கூட்டுசேரோம்!"

## தினசரி ஏடுகளின் புரளிகளுக்கு தமிழரசுப் பிரமுகர் ஆப்பு!

தமிழ் காங்கிரஸ் தமிழ் மக்களின் துரோகக் கட்சி. 1949ம் ஆண்டு மந்திரிப் பதவியொன்றுக்கு ஆசைப்பட்டு இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தை ஆதரித்ததன்மூலம் 10 இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களை அரசியல் அனுதைகளாக்குவதற்கு ஒத்தூதித் துரோகம் விளைத்த தமிழ் காங்கிரஸ், தொடர்ச்சியாக இன்றுவரை தமிழினத்தைக் காட்டிக்கொடுத்துக்கொண்டே வருகிறது. இத்தகைய கட்சியுடன் அரசியல் ரீதியில் தமிழரசுக் கட்சி ஒருபோதுமே இணைய முடியாது.

"தமிழரசுக் கட்சியை தமிழ் காங்கிரசுடன் எப்படியாவது இணைத்து அதன்மூலம் செத்துப்போன தமிழ் காங்கிரசுக்கு உயிரூட்ட முடியாதா என்று அங்கலாய்க்கும் ஒரு சிலரும் பத்திரிகைகளும்தான தமிழ் காங்கிரஸ்—தமிழரசு இணைப்பு என்று எதைஎதையோ கூறி கரடிவிடுகின்றனர். இத்தகையோரின் மாய வலையில் தமிழ் மக்கள் மயங்கிவிடக்கூடாது.

"சிங்கள மக்களிடம் இந்நாட்டு ஆட்சியை ஒப்படைத்துள்ள ஒற்றையாட்சிக்கு துதிபாடும் தமிழ் காங்கிரசுடன் தமிழரசுக் கட்சி இணையக்கூடவேண்டாம்—இணையும் எண்ணம் ஏற்படினும் அது தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சி மேல் வைத்துள்ள நம்பிக்கைக்கு துரோகமிழைப்பதாகும். தன்மீது நம்பிக்கை வைத்துள்ள தமிழ் மக்களுக்கு தமிழரசுக் கட்சி ஒரு போதும துரோகம் புரியாது,"

—இவ்வாறு தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் திட்டவட்டமாக தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"தமிழ் மக்களின் முன்னேற்றங்களுக்கெல்லாம் இன்று தடைக்கல்லாக தமிழ் காங்கிரஸ் விளங்குகிறது. 1956 முதல் 1965 வரை தமிழ் மக்களின் மொழியுரிமைக்காக தமிழ் மக்கள் கட்சி சார்பின்றி நடத்திய போராட்டங்களையெல்லாம் முறியடிப்பதற்கு


(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சியின் 11வதுதேசியமாநாடு ஏற்பாடுகள் ஜரூர்!

தமிழரசுக் கட்சியின் 11வது தேசிய மாநாட்டிற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதில் தமிழரசுத் தலைவர்கள் ஜரூராக ஈடுபட்டு வருகின்றனர். இம் மாநாட்டிற்கு தமிழகத்திலிருந்தும் அறிஞர்கள் சிலர் வருகைதரவுள்ளனர் என்று தெரிகிறது.

மாநாடு, உடுவில் தொகுதியில் ஏப்ரல் 7, 8, 9 திகதிகளில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாநாட்டை சிறப்புற நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கென உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் வரவேற்புக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக் குழுவின் செயலாளர்களாக உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. முத்திலிங்கமும், கொக்குவில் கிராமசபைத்உப தலைவர்திரு. என். அருணசலமும் கடமையாற்றுகின்றனர். பொருளாளராக கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

மாநாட்டில் இடம் பெறவிருக்கும் கலை நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பாளராக வழக்கறிஞர் திரு. மு. ஆலாலசுந்தரம் கடமையாற்றுகிருர்.




## தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் நமது பொங்கல் வாழ்த்துக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நீ போனாலும் அங்கே உன்னோடு!

## அத்தியாயம் (1)

டாங், டாங், டிங், டிங், இன்னிசையாக எழுந்த கடிகாரத்தின் ரீங்காரநாதம் கேட்டதும் அத்தனை நேரமும் பைல்களைப் புரட்டித் தலையை உடைத்துக்கொண்டிருந்த ரகுவின் உலர்ந்து போயிருந்த உதடுகளில் ஒரு புன்னகை மிளிர்ந்தது. அப்பாடா, என்று அவனையும் அறியாமல் நிம்மதி பெருமூச்சாக வெளிவர அவசர அவசரமாக எழுந்து தனது மேசை ட்ருயரைத் திறந்து அலுவலகப பைல்களை இறுக்கிப பூட்டிவிட்டுக் காற்சட்டைப பைக்குள் கைவிட்டுக் கைக்குட்டையை இழுத்து முகத்தில் அரும்பி நின்ற வியர்வையை ஒற்றித் துடைத்துவிட்டுக் கொண்டான்.

அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் 'டக்டக்' எனப் 'பூட்ஸ்' ஒலிக்க அவன் அலுவலக கேட்டைத் தாண்டிச் சாலையில் நடந்து கொண்டிருந்தான், நாள் முழுவதும அலுவலகத்துள் அடங்கிக் கிடந்தபோது அவனிடம் இல்லாத ஒரு துடிப்பும் வேகமும், படபடப்பும் இப்போதுஅவனிடம்காணப் பட்டன. எவ்வளவு சீக்கிரமாக வீட்டையடைய முடியுமோ அவ்வளவு சீக்கிரம அடைந்து விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் துரித நடைபோட்டான் அவன்.

கால்கள் பழக்கத்தினுல் அசைந்து கொண்டிருக்க அவன் மனமெல்லாம் எங்கோ லயித்திருநதது. அந்த உள்ளத்தாமரையல் துருதுருக்கும் கருவண்டு போன்ற இரண்டு கயல்விழிகளைத்தவிர வேறு எதுவுமே தெரியவில்லை. இந்நேரம் அந்த இரு விழிகளும அவன் வரவை எதிர்பார்த்துப் பார்த்து அலுத்து ஓய்நது போயிருக்கும என்று நினைத்தபோதே அவனுககுச் சிரிக்கத் தோனறியது. நாள் தோறும் அதாவது கடந்த சில மாதங்களாக நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சி தான் இது! ஆயினும் நாள் தோறும் அந்த நிகழ்ச்சியில் ஒரு புதிய இனபம, ஒரு புதிய அனுபவம் கலந்திருபபது போன்ற உணர்ச்சியில் அவன் தன்னையே மறந்துவிடுகிருன். நாள் தோறும் பார்த்துப் பழகும் விழிகள் தான். ஆயினும் அவற்றைச் சந்திக்கும் போது அவன் மனதில் எழும் துடிப்பு...? அதை வர்ணிக்க அவன் ஒரு கவிஞனுகவோ கதாசிரியனுகவோ பிறக்கவில்லையே... தினம்தினம் நடைபெறும் ஒரு செயல் அவனுக்குச் சிறிதாவது கசக்க வேண்டுமே...? ஊஹூம் அது கசக்குமா...? இன்பம்... இன்பம் எல்லையில்லாத இன்பமது.

இப்படியான ஒரு ஆர்வம் சார்ந்த மனநிலை அவனுக்குத் தன் அலுவல்களில் மட்டும் வரக்காணேம். ஏதோ ஒருவிதகடமைககாக வேண்டாவெறுப்புடன் காலையில் சென்று மாலையில் திரும்பும் அவனுக்குத் தன் வேலையில் மட்டும் ஒருபிடிப்போ பிரியமோ என்றுமே ஏற்பட்டதில்லை, ஏற்படும் என்ற நம்பிக்கையும் அவனை விட்டு அகன்று விட்டது. சிந்தனையின் நடுவில் நடந்து கொண்டிருந்தவன் வீட்டையடைந்ததும் அவசரமாகத் தன் உடைகளைக் களைந்துவிட்டு மாற்றுடை அணிந்து கொல்லைப் புறத்தில் இருந்த மாட்டுக கொட்டிலை நோக்கி விரைந்தான்.

அவனைத் தூரத்திற்கண்ட ஆவினம் குதூகலத்தில் அம்மா... அமமா... என்று வாய்விட்டுக கதறி அவனை வரவேற்றன. அவன் மாட்டுக் கொட்டிலை அடைந்ததும் அவற்றைத் தடவிப் பரண்மேல ஒழுங்காக அடுக்கிவைக்கபபட்டிருந்த வைக்கோல் கற்றை ஒனறு இழுத்துப் பிரித்து உலுக்கி உணவு போடும் பெட்டிக்குள் போட்டு அந்தப் பசுக்களை உச்சியில் தடவிக் கொண்டான். அப்போது அவன் விழிகள் புதிதாக அவர்கள் கொல்லைபபுற வேலி ஓரமாக எழுந்திருந்த இரண்டடுக்கு மாளிகையின் படுக்கையறை ஜன்னலிற் பதிந்து நின்றது.

வழக்கமாக சந்திரன்வரவு கண்டு கொந்தளிக்கும் சமுத்திரம் போன்ற அவன் இதயககடல் அன்று மிகவும் அமைதியாக இருந்தது. அதனுல் அவன் முகத்திலும் பிரகாசமில்லை, கண்களில எதையோ பறிகொடுத்த சோக உணர்ச்சி. இதற்கெல்லாம் காரணம் வழக்கமாக அவன் வரவு கண்டு மலரும் அந்த அல்லி விழிகள் இரண்டையும் இன்று காணுததாகவும் இருக்கலாம்... ஒரு வேளை அவனை ஏமாறறி வேடிக்கை பார்ககவேண்டும் என்ற நோக்கத்துடன் அவள் எங்காவது மறைந்து கொண்டிருப்பாளோ...? இந்த எண்ணத்தின் எதிரொலி அவாகள வேலிக்கு எல்லையாக நின்ற கொய்யா மரத்தின் கீழ் அவனைக் கொண்டு நிறுத்தியது. இலை தெரியாமல்காய்த்துக்கனிந்திருந்த கொய்யாப பழங்களைப் பறிப்பதுபோல் அடுத்த வீட்டுப்பக்கம் தன் பார்வையைச் செலுத்துகிருன அவன். மிஞ்சியது ஏமாற்றமே.

ஏமாற்றம் ஒருபுறம் வேதனை மறுபுறமாகவாட்ட மீண்டும் மாட்டுக் கொட்டில் நோக்கி நடக்கிருன். அங்கே நின்று கொணடே ஆசையை அடக்க முடியாதவனுய் மீண்டும தன்பார்வையை அந்தப் படுக்கையறைப்பக்கம் செலுத்துகிருன். அவனுல் அவன் கண்களை நம்பமுடியாமல் இருக்கிறது. ஒரு சிறந்த ஓவியனின் அற்புத சருஷ்டியோ என்று ஐயுறும் வண்ணம் மார்பகத்தில் இருந்து உச்சி வரை ஜனனலூடாகத் தெரிய ஓர் அழகுப் பிம்பமாகக காட்சியளித்தாள் அவள். ஆனுல் இயற்கையாக இருக்கும் குறும்பும் மலர்ச்சியும அன்றுமட்டும் அவள் கண்களில் காணப்படவில்லை. சோகந்ததும்பிய அந்தக் கயல்விழிகளைக் கண்ட அவன் விழிகளிலும் ஓர் சோர்வு...ஒரு நெகிழ்ச்சி காணப்படுகிறது. இருவர் விழிகளும் இருஊமைகளைப் போல தமக்குப் புரியக் கூடியதாகப் பேசிக் கொள்கின்றன.

சில நிமிடத்தில் அவள் இரு கரமும் ஜனனற் கம்பிகளைப் பிடிததுக்கொள்ள அவள் உருவம படிப்படியாக மேல் எழுகிறது. அவள் விழிகள் அச்சத்தோடு அங்குமிங்கும் பார்த்ததில் இருந்து அங்கு வேறு யாராவது இருக்கிருர்களோ என்று அவள் சந்தேகப்படுவது போற் தோன்றியது. அவள் எண்ண அலைகளை ஆராய்க்கக்கூடிய வல்லமைபடைத்த அவன் அவளைப் புரிந்து கொண்டவன்போல் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு யாருமில்லை என்பதுபோல தன் கைகளை அகல விரித்து செய்கை மூலம் காண்பிக்கிருன்.

அதைப் புரிந்துகொண்டு அவளும் தன் வீட்டுப் பக்கம் விழிகளைச் சுழலவிட்டுப் பார்க்கிருள். அடுத்த நிமிடம் இமைக்கும் பொழுதுக்குள் தன் மடிக்குள் இருந்து எதையோ பத்திரமாக எடுத்து அவனை நோக்கி வீசி எறிகிருள் அவள். அவன் குனிந்து தன் காலடியில் விழுந்து கிடந்த அதை எடுத்துககொள்கிருன்.

ஒரு கல்லிற் சுற்றி எறியப் பட்ட காகிதத்துண்டுதான் அது. நிமிர்ந்ததும் அவன் பார்வை ஜன்னலண்டை செல்கிறது. அங்கே சூனியம் நிலவ அவள் நின்ற ஜன்னல் வெறிச்சோடிக் கிடக்கிறது.

நமது தொடர்கதை

அதற்குமேல் அவன் அங்கு நிற்கவில்லை. அவனுல் நிற்க முடியவில்லை. தன் கையில் பத்திரமாக இருந்த காகிதத்தை மட்டும் காற்சட்டைப் பைக்குள் திணித்துவிட்டு கல்லை மாட்டுத்தொழுவப் பக்கம் வீசியெறிகிருன். அவன் கால்கள் கிணற்றடிக்கு அவனை இட்டுச் செல்கின்றன.

அவன் மனதில் ஏதோ குழப்பங்கள் உருவாகின்றன. அவனுல் எதையுமே புரிந்து கொள்ள முடியவில்லை. நேற்றுவரை பார்வையாலும் இடையிடையே இரகசியமாகக் கலந்துரையாடிய குறும்புப் பேச்சுக்களாலும் சநதித்துவந்த அவளுக்கு இன்று என்ன வந்துவிட்டதோ...? தன் தாயைக் கண்டதும் கை காலை அடித்து மகிழும் பச்சைக் குழந்தைபோல் அவனைக் கண்டதும் துள்ளி மகிழும் அவள் இன்று முகம் சோர்ந்து மனம்வாடி எல்லாவற்றையும் பறிகொடுத்த நிலையில் காட்சியளித்ததன் காரணம் எதுவாக இருக்கும்...? அவனுக்கு எதுவும் விளங்கவில்லை. காற்சட்டைப் பைக்குள் இருந்த காகிதத்தை எடுத்து விரிக்க முயற்சிக்கிருன். ஆனுல் அவன் கையும் காலும் நடுங்கிக்கொள்கின்றன. அவன் அதைப் பிரிக்க முடியாமல் மீண்டும் காற்சட்டைப் பைக்குள்ளேயே திணித்து விட்டு, கைகால் அலம்பத் தொடங்குகிருன். ஆயினும் பைக்குள் இருந்த காகிதம் அவனுக்குச் சுமையாகத் தெரிகிறது.

திடீர் எனப் பக்கத்து வீட்டுக் கார் 'பூம் பூம்' எனப் பேயாக அலறத் தொடங்குகிறது. அந்தச் சத்தத்தைக கேட்கவிரும்பாதவன்போல் கிணற்றில் இருந்து நீரை அள்ளி வாளி நிரம்ப இறைத்துவிட்டுத் தன் முகத்தைக் கழுவ ஆரம்பிக்கிருன் அவன். 'ரகு...டேய் ரகு...' அவனை வளர்த்து ஆளாக்கிய பெரியவர்—முதியவருக்கு— அவனுக்கு மாமா முறையானவர்— அவனை அழைத்துக்கொண்டே அவன் அருகில் வருகிருர்.

'என்ன மாமா என்ன விஷயம்...எதற்காக நீங்கள் இவ்வளவு தூரம் வரவேண்டும...ஒரு குரல் கொடுத்திருந்தால் நானே அங்கு ஓடி வந்திருக்கமாட்டேனு என்ன...? இருங்கள் இதோ ஒரு நொடியில் முகததைக் கழுவிவிட்டு வந்துவிடுகிறேன்...' கூறிக்கொண்டே 'சள சள' எனத் தண்ணீரை ஊற்றி முகத்தைக் கழுவிக் கொள்கிருன் அவன். 'என்னப்பா கந்தோரால் வரும் போது உன்னைக் கண்டேன். அதற்குப்பின் உன்னை அந்தப் பககமே காணவில்லை... இவ்வளவு நேரமாக என்ன செய்கிருய் என்று பார்ககத்தான் நானே எழுந்து வந்தேன்...ம்...ம்... எவ்வளவு நேரமாகத்தான் இந்த முகதத்தைக் கழுவிருய், அவ்வளவு அழுக்காடா உன்ர முகம்...? ஆண் பிள்ளைகள் சட்புட் என்று ஒரு காரியத்தைச் செய்யப் பழகிக்கொள்ள வேண்டும். சீக்கிரம் கழுவிப் போட்டுவா...' கிழவரின குரலில் அலுப்புத் தட்டியது.

கிழவர்தான் இதுவரை பேசினுரா என்று ரகுவால் நம்ப முடியவில்லை, அவனுக்கு இது வேறு ஆச்சரியமாக இருந்தது. அவனைச் சிறு வயதில் இருந்து ஆளாக்கி இது நாள் வரை எங்கே போனுய் என்ன செய்தாய்...? என்று ஒரு கேள்விகூடக்கேட்டுப்பழக்கமில்லாத சின்னையா இவ்வளவு தூரம் அவனைத் தேடி வந்து கேள்வி கேட்கும்— அளவுக்கு அப்படி என்ன தான் நேர்ந்துவிட்டது...? அவர் கேள்வி அவனுககுச் சிறிது கோபத்தை உண்டு பண்ணியது என்று கூடக் கூறலாம்.

'என்ன மாமா...இன்றைக்குத்தான் ஏதோ புதிதாகக் காரியம் நடைபெறுவது போல் கேள்வி கேட்கிறீர்கள். நான் உத்தியோகம் பார்க்கத் தொடங்கிய நாளில் இருந்து என்ன செய்துவருகிறேனே அதைத் தான் இப்போதும் செய்தேன். மாடுகளுக்குத் தீனி போட்டு தண்ணீர் காட்டி, மாட்டடி, துப்புரவாக்கி...

ப.பாலேஸ்வரி

இதையெல்லாம் இத்தனை நாளும் வேலையிலிருநது வீடு திருமபியதும நான்தானே செய்து வருகிறேன். இது தெரிந்திருநதும் இன்று ஏன ஒருபுதுக் கேளவி மாமா...? மனதில் உதித்த கோபத்தையெல்லாம் வார்த்தைகளாகக் கொட்டிவிட்டுக் குழம்பிய மனத்துடன் பெரியவரைத் தொடர்ந்து வீட்டினுள் நுழைந்தான் அவன்.

அவனுக்கு கொஞ்சநஞ்சமிருந்த அமைதியும பெரியவரின் செயகையால் முறறுக அற்றுப்போய்விட்டது. போதாததற்குஉமாவின் கடிதம் அவன் உள்ளத்தைச் சுமையாக அழுத்திக்கொண்டிருந்தது. எபபடியாவது ஒரு தனிமையான இடத்துககுச் சென்று உமாவின கடிதத்தைப் படித்து அவள் என்ன எழுதியிருக்கிருள் என்பதை அறிந்துவிட அவன் மனந் துடியாய்த் துடித்தது

ஏதாவது அவசியம் ஏற்படாமல் அவள் எழுதியிருக்கவே மாட்டாள் என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரிநதிருந்தது. ஒருவேளை எமக்குள ஏற்பட்ட உறவு பற்றி அவள் அப்பாவுக்குத் தெரிந்து விட்டதோ...? அப்படியிருக்கும் பட்சத்தில் அதனுல் என்ன விபரீதம் நிகழக் கூடும்...? இன்று மாமா எதற்காக என்னை உழவறியும் சி. ஐ. டி. போலப் பினதொடர்ந்தார்? அவரது பேச்சும் புரிந்து கொள்ள முடியாததாக இருக்கிறது. இவற்றையெல்லாம் தொடாபு படுததிப் பார்த்தபோது ஏதோ நடக்க முடியாத அசம்பாவிதம் ஒனறு நடந்து விட்டதென அவன் முடிவுகட்டினுன்.

அவன் மனதில் என்றுமில்லாத ஒரு பயம் குடிகொண்டிருந்தது. நிம்மதியற்ற மனதுடன் தலை சீவிக் கொண்டிருந்த அவனை 'ரகு...தம்பீ டேய் ரகு...'என்று சின்னையா மீண்டும் அழைக்கவே அவன் திடுக்கிட்டான். இருந்தும் தன் பயத்தை வெளிக்காட்டாமல் தலையைச் சீவிக் கொண்டே வெளியே வந்தான். சாய்வு நாற்காலியில் படுத்துக கொண்டே பத்திரிகை ஒன்றினுல் விசிறிக் கொண்டிருந்த சின்னையா அவனைப் பார்த்த பார்வையைச்சகித்துக் கொள்ள முடியாதவனுய் 'என்ன மாமா' என்று கேட்டு விட்டுத் தன் பார்வையை வேறுபுறந் திருப்பிக் கொண்டான்.

அவனை மேலும் கீழுமாக அன்பொழுகப் பார்த்த சின்னையா தன் பக்கத்தில் வெறுமையாகக் கிடந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டி 'இப்படி உட்கார் அப்பா. உன்னுடன் தனிமையில் நான் இரண்டொரு வார்த்தைகள்பேச ஆசைப்படுகிறேன் என்று கூறியபோது ரகுவுக்குப் பூமியே பிளந்து தன்னை விழுங்கி விடுவது போன்ற தோர் உணர்ச்சி ஏற்பட்டது.

அவன் மறுவார்த்தை பேச மனமின்றி மகுடிக்குக் கட்டுண்ட நாகம்போல மௌனமாக அந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான். இருட்டறையொன்றில் பூட்டப்பட்டவன் நிலையில் இருந்தான் அவன். ஆனுல் அவன மனமோ பரீட்சைப் பேற்றை எதிர்பார்த்திருக்கும் ஒரு மாணவன் நிலையில் இருந்தது.

'தம்பி' என்று அவர் தொடர்ந்தபோது அவன் உடல் சிறிது நடுங்கியது. அந்த அழைபபின தொனி அவ்வளவு இதமாகப்படவில்லை அவனுக்கு. ஆகவே படபடக்கும் நெஞ்சுடன் அவர் ஒப்புவிக்கப் போகும் பாடத்தைக் கேட்க அவன் தன்னைச் சிறுகச்சிறுகத தயார்ப்படுத்திககொண்டான். 'தம்பீ' என்று ஆரம்பித்தவர் தொடர்ந்தார்.

'உனக்குத் தெரியவேண்டும் உன்னை நான் எத்தனை வயதில் எடுத்து வளர்ககத் தொடங்கினேன் என்று. நீ பிறந்தவேளை ஒரு மாதப் பிள்ளையாக இருக்கும் போதே உன் அபபா ஏதோ விபத்துக்குள்ளாகி அகால மரணமடைந்தார். அதன் பின்பு என் பெரியதாயாரின் மகளும் எனக்குத் தங்கை முறையுமாகிய மரகதம் உன்னைப்பாடுபட்டு வளர்த்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தாளையூர் முருகுப்பிள்ளை
தாழங்குடா.

கே: எந்தச் சூழ்நிலையில் மனிதன் தன் பொறுமையைக் காண்பிக்க வேண்டும்?

ப: சுவாரஸ்யமாக சினிமா பார்த்துக்கொண்டிருக்கையில் பக்கத்தில் தாய் மடியிலிருந்த கைக்குழந்தை வீரிட்டு அலறும் போது!

கே: தனிமனிதன் ஒரு கொலைசெய்தால் கொலைகாரன் என்கிறோம்! போரில் ஒருவன்பல கொலைகளைச் செய்தால், வீரன் என்கிறோம் இது ஏன்?

ப: தனிமனிதனைக் கொலை செய்வது கொலை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில்; எனவே, அவன்கொலைகாரன். ஆனால் போரின் நோக்கம் கொலை செய்வதல்ல. ஒரு நாட்டையோ இனத்தையோ காப்பாற்றுவது: எனவே நோக்கமே கவனிக்கப்பட வேண்டியது!

ஃ

நடனமாடி
மடுல்சீமை.

கே: 'திருடர்கள் யாக்கிரதை'' என்பது சரியா அல்லது 'திருடர்கள் சாக்கிரதை' என்பது சரியா?

ப: இரண்டுமே தவறு. 'திருடர்கள் ஜாக்கிரதை' என்பதே சரி, தனித்தமிழில் எழுதுவதானால் 'திருடர்கள் கவனம்' என்று எழுதலாமே!

கே: யார் யாருக்காக ஏன் எதற்காகப்பயப்பட வேண்டும்?

ப: யாரும் யாருக்காகவும் எதற்காகவும் பயப்பட வேண்டியதில்லை — மனச்சாட்சிக்கு கட்டுப் பட்டு நடந்தால்!

ஃ

வே. நடராசா
கொடிகாமம்,

கே: 'தேர்தல் வரும் பின்னே...?

ப: மதுப் புட்டி வரும் முன்னே'

ஃ

மு. கருணாநிதி
ஏழாலை மேற்கு.

கே: பலப்பிட்டியில் ஐக்கிய தேசியக் கட்சியின்வெற்றியை பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: சிங்கள மக்களிடம் வகுப்புவாதம் செத்துக் கொண்டிருக்கிறதென்று கருதுகிறேன்.

கே: மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளக்கூடாதென்பது ஏன்?

ப: பெரியவர்களானதும் அவர்கள் அரசியலில் பங்கேற்க வேண்டியிருப்பதால்!

கே: உலகத்தில் தற்போது அதிக மலிவானது எது?

ப: காதல்!

கே: தற்போதைய இலங்கைக்கு எது வேண்டும்?

ப: சமஷ்டி ஆட்சி!

ஃ

பொ: சுதந்திரராசன்
மட்டுவில் வடக்கு.

கே: நீங்கள் இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்திருந்தால் அண்மையில் நடந்த பொது வேலை நிறுத்தத்தை எப்படி தீர்த்திருப்பீர்கள்?

ப: வேலை நிறுத்தம் ஏற்படாமலே சமாளித்திருப்பேன்!

கே: எதிர் வரும் நாகர் கோவில் இடைத்தேர்தலில் திரு. காமராசர் வெற்றி பெறுவாரா?

ப: காமராசருடன் தி.மு.க. நேரடியாகப் போட்டியிடாததாலும் கூட்டணிக்கட்சிகளில் ஒன்றான இடதுசாரி கம்யூனிஸ்ட் வேறு போட்டிக்கு நிற்பதாலும் காங்கிரஸ் எதிர்ப்பு வாக்குகள் சிதறும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் காமராசருக்கு வெற்றிவாய்ப்பு இருக்கிறது!

ஃ

'புலியூர்க் கேக்கே'
பருத்தித்துறை.

கே: உங்களுக்கு இந்த அரசாங்கம் திடீரென்று வேலை நீக்க நோட்டீஸ் கொடுத்தால்...?

ப: அந்த அதிகாரம் இந்த அரசாங்கத்துக்கு கிடையாது. வாசகர்களாகிய உங்களுக்குத்தான் உண்டு.

கே: கணவன் இருக்க இன்னொருவரிடமும், மனைவியிருக்க இன்னொருத்தியிடமும் போகும் ஆண்கள் பெண்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: கிடைத்ததைக் கொண்டு திருப்தியடையத் தெரியாதவர்கள்!

கே: ஒரு பெண் துணிந்து தவறுகள் செய்வது திருமணத்திற்கு முன்பா அல்லது பின்பா?

ப: திருமணத்துக்கு பின்புதான்! கணவன் என்றபோர்வையின்கீழ் மறைந்துகொண்டு தவறு செய்தால் உலகுக்கு மூடி மறைத்துவிடலாமல்லவா?

கே: எப்பொழுதும் சிரித்த முகத்துடன் காட்சி தருகிறாரே திரு. துரைரத்தினம் எம். பி, இதன் மர்மம் என்ன?

ப: இதில் மர்மம் என்ன இருக்கிறது? அவரது உள்ளம் தூய்மையான தொண்டுள்ளம். எனவே அகத்தின் அழகு முகத்தில் தெரிகிறது!

கே: மக்கள் போக்கை உணர்ந்து அதன்படி செயலாற்றும் திறமைபடைத்தவர்கள் யாராவது இ. த. அ. கட்சியில் இருக்கிறார்களா?

ப: நீங்கள் குறிப்பிட்ட அத்திறமையற்றவர்கள் யாராவது தமிழரசுக் கட்சியில் இருக்கிறார்களா?

ஃ

க. திலகராசா,
சுண்டிக்குளி.

கே: குற்றம் செய்யாத ஒருவன் குற்றம் செய்யப்பட்டவர்களால் பொய்ச்சாட்சிகளின்மூலம் பொலிசில் அகப்படுகிறான். அவன் தான் குற்றம் செய்யவில்லை என்று எத்தனை முறைபோசொல்கின்றான். பொலீஸ் இதை நம்பாமல் அவன் மீதும் குற்றம் செய்தவர்கள் மீதும் வழக்கு வைத்தார்கள். குற்றம் செய்யாதவன் வழக்கில் இருந்த தண்டனை இல்லாமல் விடுதலை அடைவானா?

ப: பொய் ஒருபோதுமே வெற்றியடைவதில்லை. குற்றமற்றவன் ஒருபோதுமே தண்டிக்கப்படுவதில்லை. தப்பித்தவறி தண்டிக்கப்பட்டாலும் அவனை ... சாட்சி முன்னர் அவன் நிரபராதிதானே!

கே. கோபால்,
ஆண்டிமுனை.

கே: உமது மகள் என் கனவில் தினமும் வந்து தொல்லைப்படுத்துகின்றாள். எச்சரிக்கை செய்து இங்கே என்னைத் தொல்லைப்படுத்தாவண்ணம் உமது மகளைக் கட்டுப்படுத்திவைப்பீரா?

ப: மாட்டேன். உமது மனதைக் கட்டுப்படுத்தி வைத்திரென்றால் எனது மகள் வரமாட்டாளே!

ஃ

சி. என். வேலு,
பத்துளுஓயா.

கே: பாடசாலைகளில் ஆசிரியர்களால் கற்றுக்கொடுக்கப்படாத ஆனால் மாணவர்கள் விரைவில் கற்கின்ற சுவையான பாடம் எது?

ப: 'காதல்' என்ற பதிலை எதிர்பார்த்தே இக்கேள்வியைப் போட்டிருக்கிறீர். ஆனால் இக்காலத்தில் ஆசிரியர்கள் மாணவிகளுக்கு அப்பாடத்தையும் சேர்த்துச் சொல்லிக் கொடுப்பது உமக்கு தெரியாதா?

---

**திருவாளர்**
**குயுக்தியார்**
**மே/பா சுதந்திரன்**
**194, ஏ பண்டாரநாயக்கா வீதி,**
**கொழும்பு-12**

---

ஆ. சபா. பாலகங்காதரன்
வெள்ளவத்தை.

கே: தமிழ்ணங்குகள் தமிழ் மரபை விட்டு வெகு தூரம்சென்றுவிட்டனரே— தமிழனையே தலைகுனியும் இந்நிலையை முன்னாள் தமிழ் குலவிளக்குகள் கண்ணுற்றால்...?

ப: தம்மைத் தமிழணங்குகள் என்று சொல்லவே வெட்கப்படுவார்கள்!

கே: தவித்து இருக்கும் தமிழனுக்கு ஈழ நாட்டில் என்ன உரிமை உள்ளது? இந்நிலை என்று தான் மாறும்?

ப: தமிழரசு ஏற்படும் போதுதான் தமிழன் தலை நிமிரலாம்!

ஃ

'கேயெஸ்'
அக்கரபத்தனை'

கே: ஒவ்வொரு அமாவாசை தினத்திலும் சந்திர, சூரியர் சந்தித்து பேசிக் கொள்வார்கள் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது இவ்வாறிருக்க, சமீபத்தில் அமெரிக்கர்கள் சந்திரனுக்கு மேலேயேசென்று வந்துவிட்டார்கள். ஆகவே அடுத்து வரும் ஜனவரி 17 ம் திகதி சூரியனும், சந்திரனும் சந்தித்தால் எதைப் பற்றிச் சம்பாஷிப்பார்கள்?

ப: இயற்கையை வெல்ல எண்ணும் ஆறறிவு தவிர அதற்குமேல் அறிவற்ற மனிதனின் மடத்தனத்தைப் பற்றி!

ஃ

க. வீரபத்திரன்
உடப்பு

கே: ஜி: ஜி: அமைதி கொண்டிருப்பதன் காரணம் என்ன?

ப: ... அனைத்தும் உடைக்கப்பட்டு விட்டதால்!

க. இராசரத்தினம்,
சங்கரத்தை

கே, அரசாங்கம் யாவற்றையும் தேசியமயமாக்குவது தாடு, மனைவிமாக்களையும் தேசியமயமாக்கினால்...?

ப: அதையும் ஏற்றுக் கொள்ளுவார்கள் இளிச்சவாயர்களான இடதுசாரிகள்!

கே: இன்றையத் தமிழன் என்ன செய்கிறான்?

ப: கொதிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது சினிமாபார்ப்பதற்காக கியூவில் தவம் இருக்கிறான்!

கே: வேலை நிறுத்தம் செய்யாத எல்லோர்க்கும் பிரதமமந்திரி நன்றி தெரிவித்து இருப்பதன் காரணம் யாது?

ப; கைகொடுத்து தவியவர்கள் அல்லவா? அதனால் தான்!

ஃ

பொ: சுலைச்செல்வி,
ஏழாலை மேற்கு

கே: திரு. பொன்னம்பலத்தின் அட்டாவடித்தனமெல்லாம் இப்பொழுது கொஞ்சம் அடங்கியுள்ளது போலத் தெரிகிறதே?

ப: கெட்டிக்காரன் புழுகு கூட எட்டு நாளைக்குத் தானே!

# பொங்கல்

## பாண்டித் துமிலன்

கங்கை பெருக்கெடுத்துக் கழனி வயல் நிறைந்து
எங்கும் பொலிய இனிது வரும் நாளில்
மங்கை குளித்து மலர்சூடி, தோழிப்,
பாங்கி அருகே பருவ நடை நடக்க
ஏங்கித் துவழும் இளங் கொடியைப் போல் அசைய
வீங்கித் திரண்ட விரிந்த புயத்தழகை
தாங்கிடு நெஞ்சன் தலைவனவன் வந்தான்
தேங்கினர் அன்பால் தென்னவனைக் கண்டாள்
ஆங்கோர் விநாடி அன்பைப் பகிர்ந்திருவர்
வாங்கினர் சற்று வானுலகிற்கே சென்றார்
பூங்குயில் பாட புள்ளிமான் துள்ளியெழத்,
தூங்கும் பறவை துயில் எழுந்து ஆர்ப்பரிக்க
கங்குல் கலைந்து கதிரோன் கிழக்கினிலே
பொங்கி யெழுந்தான் புலர்ந்தது வையமெல்லாம்
நங்கை துவண்டாள் நாயகன் கண்விழித்தான்
செங்காந்தள் கரம்பற்றி செப்பிடுவான்
கொங்கை திரள் மங்கையவள் கேட்பாள்:
சங்கைக்குரிய சிங்கத் தமிழ் உழவர்
பொங்கிப் படைக்கும் புதுநாள் இதுகண்ணே
தங்கத்தால் பானையிடு தனியாகக் கோலமிடு
செங்கரும்பு மாவாழைக் கனிகளொடு
சங்கரிசிப் பச்சரிசி தனிப்பயறு
தெங்கிளநீர் சேர்மாதுளைக்கதலியோடு
மங்களம் பொங்கி மங்கை நீ சேர்த்து
பொங்கிப் படைத்தாற் புதுமைத் தமிழ் மணக்க
அங்கே வருவேன் அமுதத்தை உண்டிருப்பேன்
மங்கை அருகிருக்க மச்சான் உடன் இருந்து
துன்பம் மறந்து துயர் மறந்து வையம்
அன்பும் அறமும் அழகு தமிழ் ஓங்க
இங்கு வரும் பொங்கல் இன்று எமக்கு.

---

# செங்கதிர் எழுந்தான்

—கல்முனைப் பூபால்—

குருவிகள் கீதம் பாட
கோழிகள் கூவி ஆட
ஒருபெரும் திரளாய் வானில்
உரசியே மேகம் ஓட
திருவிழி திறந்தான் பானு!
தேன்பலாச் சுளையின் வெற்பு!
மருமகன் ஒழிதல் போலும்
மறைந்தன இருளின் ஆட்சி!

எங்குமே மௌனம், பூக்கள்
இன்முகைச் சுகந்தம் பெய்ய
கொங்கைகள் சோர்ந்து மாதர்
கொவ்வையின் இதழ்கள் ஆட
பங்கமே இல்லா வாறு
பாலென உலகம் மாந்தி
செங்கதிர் எழுந்தான்! பொய்மைத்
தேசுகள் ஒடித்தான்! வந்தான்!

அந்தமான் தீவை நோக்கி
அடிமைகள் செல்தல் போலும்
இந்தநாள் இரவை கொண்ட
இருட்களை அகற்றித் தேக்கி
செந்தமிழ்ச் சாற்றில் தோய்ந்த
செழுங்கவிக் குயிலாய் வானில்
மந்தகா ரங்கள் கொன்று
கிழக்கினிற் பகலோன் வந்தான்

பொய்மையிற் தோய்ந்து உள்ளம்
புரைகிடும் இருளைக் கொன்று
மெய்மையின் சரமாய், செங்கோல்
வேந்தனாய், பகலைப் பேணும்
தெய்வநற் தாயாய் வாழும்
தேன்தமிழ் மொழியாய் பாரில்
பெய்தனன் ஒளியை எங்கும்
தினகரன்; இன்பம் பொங்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## பொங்கற் சபதம்!

'நன்றும் தீதும் பிறர்தர வாரா' என்பது புறநானூற்றுப்-புலவன் வாக்கு. இக்கருத்தின் தாற்பரியத்தை எவ்வளவுதான் எடுத்துக் கூறினாலும், இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களுக்குப் புரியாதது தைக் கண்டு வெட்கப்படுகிறோம்; வேதனையடைகிறோம்.

இந்நாட்டில் தமிழை வாழ வைப்பதும், தாழ வைடபதும் தமிழ் பேசும் மக்களின் கைகளிலேதான் உண்டு. சிங்களவர்கள் தமிழைப் புறக்கணிக்கிறார்கள் என்று கூட்டங்களில் நின்று ஒப்பாரி வைத்து அலறுவதற்கு முன், தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் தங்கள் அன்றாடக் கருமங்களில் தமிழை உபயோகிக்கின்றார்கள் என்பதை ஒவ்வொரு தமிழனும் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அன்னைத் தமிழ், கன்னித் தமிழ், செந்தமிழ் முத்தமிழ் என்றெல்லாம் அடைமொழி சேர்த்து அழகொழுக மேடைகளில் பேசிவிட்டுப் போவதால் இந்நாட்டில் தமிழ் வாழ்ந்து விடாது; வளர்ந்துவிடாது. ஆட்சித் துறையில் உபயோகப்படுத்தப்படவும் மாட்டாது. இதை ஒவ்வொரு தமிழ் மகனும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

உலகில் எந்த ஒரு மொழி பேசுபவனையும் பார்த்து உன்து தாய் மொழியிலே பேசு; சகல துறைகளிலும் தாய் மொழியையே உபயோகி என்று யாரும் புத்திமதி கூறுவதில்லை; பிரசாரம் செய்வதுமில்லை. ஆனால் தமிழனுக்கு மட்டும்தான் தமிழிலே பேசு; தமிழிலே எழுது; தமிழிலே அன்றாட அலுவல்களைச் செய்; என்றெல்லாம் எடுத்துக் கூற வேண்டிய வெட்கங்கெட்ட நிலை இருந்து வருகிறது.

1956-ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தைத் தொடர்ந்து தமிழ்ப் பிரதேசங்களில் நிலவி வந்த போராட்டச் சூழ்நிலையில், எல்லாம் தமிழியக்கம் வேகமாக செயற்பட்டு வந்தது. ஆனால் இன்றோ பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

தமிழ் மக்கள் தமிழைப் பயன்படுத்தத் தவறுவதால், இந்நாட்டில், இரத்தமும் வியர்வையும் சிந்தி நீண்ட காலமாகப் போரிட்டு வென்றெடுத்த சில பல தமிழுரிமைகள் கூடப் பறிபோகும் நிலைஇன்று இருந்து வருகிறது.

தமிழரசுக்கட்சி ஆட்சியாளருடன் வாதாடியும் போராடியும், வந்ததன் பயனாக பல அரசாங்க வெளியீடுகள் தமிழிலும் வெளிவந்தன. தமிழ் நாட்டிலேயே வெளியிடப்படாத நிலையில்—ஈழத்தில் தொலைபேசி விபரக்கொத்துக்கூட தமிழில் கடந்த ஆண்டு வெளியிடப்பட்டது. இதற்கென அரசாங்கம் பல இலட்சம் ரூபாய்களை செலவிட்டது.

ஆனால் தமிழ் மக்கள் இவற்றை வாங்குவதில் போதிய ஆர்வமும் அக்கறையும் காட்டவில்லையென்று அண்மையில் வெளிவந்த செய்திகள் கூறின. இந்நிலையில் இவற்றை மீண்டும் தமிழில் வெளியிடுவது வீண் நஷ்டம் என்று கூறிக்கொண்டு அரசாங்கம் தமிழ்வெளியீடுகளை நிறுத்திவிட முயன்றால், அதற்கு தமிழ் மக்களே காரணஸ்தர்கள் என்பதை யார் மறுக்கமுடியும்?

உரிமைகளைப் பெறுவதற்கு போராடுவதை விட பெற்ற உரிமைகளைப் பாதுகாப்பது முக்கியமானது என்பதை தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது.

அமரர் திரு.வன்னியசிங்கம் அடிக்கடி கூறுவதைப் போல, தனிச் சிங்களத்தை எதிர்க்கவும், தமிழுரிமைகளைப் பேணவும், நடக்கும் கிளர்ச்சியில் தமிழ் மக்கள் யாவரும் ஒருசேர பங்குபற்றக்கூடிய ஒரே இயக்கம், எல்லாம் தமிழியக்கமாகும். தமிழ் மக்கள் எத்துறையில் பணியாற்றினாலும், எங்கிருந்தாலும், பங்குபற்றக் கூடிய ஒரே இயக்கம் எல்லாம் தமிழியக்கமே. எனவே எல்லாம் தமிழ்யக்கம் மீண்டும் புதுப்பிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறோம்.

தமிழ் மக்களின் தனிப்பெருநாளாம் தைத்திருநாள் வருகிறது. புத்தாண்டு பிறக்கிறது. ஆம், தைத்திருநாள்—தமிழர்க்கு புத்துணர்வும் புதிய தெம்பும் ஊட்டும் சக்திவாய்ந்த திருநாள்.

ஆகவே தைத்திருநாளுடன் — போனதெல்லாம் போகட்டும்! — சோரவகலட்டும்! புத்துணர்வு பிறக்கட்டும்! தமிழுணர்வு பொங்கி பிரவாகிக்கட்டும்! எல்லாம தமிழியக்கம் மீண்டும் உயிர் பெறட்டும்!

வாழ்வின் சகல துறைகளிலும் தமிழைப் பயன்படுத்துவோம்—தமிழ் நூற்களை வாங்குவோம் — இந்நாட்டில் தமிழுரிமையை நிலைநாட்டுவோம் என்று ஒவ்வொரு தமிழ் மகனும் பொங்கற் பெருநாளில் சபதம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தமிழ்த்தாயின் பெயரால் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் நமது பொங்கல் வாழ்த்துக்களையும் காணிக்கையாக்குகிறோம்.

எல்லாம் தமிழிற் செய்வோம்—நம்
வாழ்வாம் தமிழைக் காப்போம்!

---

## சாகித்திய மண்டலத்தில் தனிச் சிங்கள வெறி

தமிழறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களுக்கு தனிச் சிங்களத்தில் பாராட்டுப் பத்திரம் வழங்கியதன் மூலம் தமிழ் பேசும் அறிஞர்களையும், தமிழினத்தையும் சாகித்திய மண்டலம் அவமானப் படுத்திவிட்டதாக கொழும்புத் தமிழ்ச் சங்கம் சாடியுள்ளது. தமிழ்ச் சங்கத்தினருடன் சேர்ந்து நாமும் நமது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந் நாட்டின் மூத்த தமிழ்ப் புலவர் ஒருவரை கொழும்புக்கு வரவழைத்து அவரது முகத்திலறைந்தது போல அவருக்கு விளங்காத ஆட்சிமொழியில் பாராட்டுப் பத்திரம் வழங்குவதென்றால் இது வேண்டுமென்றே செய்யப்பட்ட ஓர் அவமானம் என்றே கருத வேண்டியுள்ளது. இதைவிட பண்டிதமணிக்கு பாராட்டிதழ் வழங்காமலேயிருந்திருக்கலாம்.

பண்டிதமணி அவர்களாயிராது, வேறு உணர்ச்சிவசப்படும் நிலையிலுள்ள தமிழ் அறிஞர்கள் யாரையாவது இவ்விதம் சாகித்திய மண்டலம் அவமானப்படுத்தியிருக்குமானால் அப்பத்திரத்தை அவ் விழாவில வைத்தே சுக்கு நூறாக கிழித்தெறிந்துவிட்டு சென்றிருப்பர். ஆனால் பண்டிதமணியோ அபபடிச் செய்வது பண்புக்குறைவு என்பதனாலோ என்னவோ அமைதி காத்தார். அதனால் சாகித்திய மண்டலத்தின் மானம் கப்பலேறாமல் தப்பிப் பிழைத்தது.

இத்தகைய தனிச் சிங்கள வெறியாட்டங்களுக்கு சாகித்திய மண்டலம் உடனடியாக முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும். சாகித்திய மண்டலத்தின் சிங்கள வெறி பற்றி தமிழ் எம். பீ.க்கள் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறுவதன் அவசியத்தையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

சாகித்திய மண்டலத்தின் சிங்கள வெறியாட்டம் நிறுத்தப்படும்வரை தமிழ் அறிஞர்கள், புலவர்கள், கலைஞர்கள் யாவரும் சாகித்திய மண்டலத்தைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்பது நமது கருத்தாகும். இக்கருத்துக்கு அவர்கள் செவி சாய்ப்பார்கள் என்று நம்புகிறோம்.

---

# தமிழ்மொழிச்சட்ட அமுலின் இலட்சணம் இதுதானா?

## கிளர்ச்சியிலிறங்க வாலிபர்கள் தயாராக வேண்டும்!

'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டங்களிலும், மாவட்ட விவசாய இணைப்புக் குழுக் கூட்டங்களிலும் பாராளு மன்ற உறுப்பினர்கள் தாம் விருப்பிய மொழியில் பேசி வருகின்றனர். ஆனால்பதிவுகள் சிங்களத்திலேயே நடைபெறுகின்றன.'

இவ்வாறு கிளிநொச்சி எம். பீ.யின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த உள்நாட்டமைச்சர் பாராளுமன்றத்திலே கூறியிருக்கிறார். உள்நாட்டமைச்சரின் இப்பதிலைத் தொடர்ந்து, வடக்கிலும், கிழக்கிலும், பதிவுகளைத் தமிழிலும் வைக்க நடவடிக்கையெடுக்கப்படவேண்டும் என்றுதிரு. இரத்தினம் கேட்டுக் கொண்டதற்கு, 'பார்க்கலாம். ஆனால் அப்படிச் செய்வதற்கு மேலதிக ஊழியர் தேவை' என்று இழுத்தடித்துப் பதிலளித்திருக்கிறார் உள்நாட்டமைச்சர்.

உள்நாட்டமைச்சரின் இந்த இழுப்பாணிப் பதில், 1966-ம் ஆண்டின் தமிழ் மொழிப் பிரமாணங்களை அமுல் நடத்துவதில் அரசாங்கம் காட்டும் அக்கறையற்ற தன்மையையே பிரதிபலிப்பதாக இருக்கிறது.

தமிழ் மொழிச்சட்டவிதிகளை நிறைவேற்றி தூங்க வைத்துவிட்டு, தமிழ்பேசும் மக்களின் பிரதேசங்களிலும் தனிச்சிங்களத்தைத் திணித்து விடுதற்கு ஆட்சியாளர்கள் மறைமுகச் சதிகளில் ஈடுபட்டிருக்கிறார்களா? தமிழ் பேசும் மக்களிடம் சிங்களத்தைத் திணித்து விடலாமென்று மனப்பால் குடிக்க ஆரம்பித்து விட்டார்களா?

தமிழ் மொழிச் சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்டு ஆண்டுகள் மூன்று முடிந்து விட்டன. இவ்விதிகளை அமுல் நடத்த இதுவரை அரசாங்கம் எடுத்த உருப்படியான நடவடிக்கைதான் என்ன? தமிழ்மொழிச் சட்ட அமுல் குறித்து இதோ வருகிறது அதோ வருகிறது என்று கூறப்பட்டு வந்த திறைசேரிச் சுற்றறிக்கைகூட இதுவரைவெளியிடப்படவில்லை.

தமிழ்மொழிச்சட்ட விதிகளை— விசுவாசத்துடன் ஆட்சியாளர்கள் அமுல் நடத்துவார்களேயானால், வடக்கிலும், கிழக்கிலும், ஒவ்வொரு அரசாங்க அலுவல்களுக்கும் சிங்களத்துடன் தமிழும் கட்டாயமாக உபயோகிக்கப்பட வேண்டும்.

ஆனால் தமிழ் பேசும் மக்களின் எழுச்சியையும் உணர்ச்சியையும் கட்டுப்படுத்தி வைக்கும் கண்துடைப்பு நடவடிக்கையாக தமிழ் மொழிப் பிரமாணங்களை நிறைவேற்றி சட்டப்புத்தகத்தில் வைத்துவிட்டு, தமிழ்ப்பிரதேசத்தில் தனிச் சிங்களத்தைத் திணிக்கும் நடவடிக்கைகளிலேதான் அரசு ஈடுபட்டுவருகிறது.

''தமிழ் பிரதேசங்களில் தனிச்சிங்களத்தைத் திணிப்போம் தமிழ் மக்கள் தூங்கிக் கொண்டிருந்தால் காரியம் கைகூடிவிடும். எதிர்ப்பார்களானால் பின்னர் பார்ப்போம்' என்று அரசாங்கம் கருதுகிறது போலும்!

இவ்விடத்தில்தான் ஆட்சியாளர்கள் தவறு விடுகின்றனர். தமிழ் மக்கள் போராட்ட நடவடிக்கைகளை நிறுத்தி விட்டு சிறிது அமைதியாக இருக்கிறார்கள் என்றால், அவர்கள் தூங்கிக் கொண்டிருப்பதாக அர்த்தமல்ல என்பதை ஆளவந்தார் உணர்ந்துகொள்ள வேண்டும், 1965ம் ஆண்டு ஆட்சியமைத்துக் கொள்வதற்காக உதவி தேவைப் பட்டபோது,தேசியம் என்ற மயக்குமொழி பேசி தமிழ் பேசும் மக்களையும் அணைத்துக் கொள்வதாக காட்டிக் கொண்ட ஆட்சியாளர்களின் போக்கு மெல்லமெல்ல மாறிவருவதையும், தேசியம் பேசியது வெறும் பாசாங்குத் தனம் என்பதையும் தமிழ் பேசும்மக்கள் உணர்ந்து விட்டார்கள்.

தமிழ் பிரதேசங்களில் தனிச் சிங்களத்தைத் திணிக்கும் போக்குத் தொடருமானால், தமிழ மொழியைக் காப்பதற்கு மீண்டும் ஒரு போராட்டத்தில் குதிப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் எப்போதும தயாராக இருக்கிறார்கள் என்று ஆட்சியாளருக்கு கூறவிரும்புகிறோம். 1961ம் ஆண்டு இரு மாதங்களாக வடக்கிலும கிழக்கிலும், ஆட்சிச்சக்கரத்தை ஸ்தம்பிக்க வைத்த தமிழ் பேசும் மக்களின் மாபெரும்போராட்டத்தை இன்றைய ஆட்சியாளர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் மொழிப் பிரமாணங்களை அமுல் நடத்த போதிய ஊழியர்களை நியமிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. எது எதற்கோ அனாவசியமாக செலவு செய்யும் ஆட்சியாளர்கள், இந் நாட்டிலுள்ள இரண்டாவது பெரிய இனமான தமிழினத்தின் மொழியுரிமைகளை நிலை நாட்டுவதற்கு மேலதிக ஊழியர்களை நியமிப்பதால் ஒன்றும் குடிமுழுகி விடாது. தேசிய ஒற்றுமையை நிலை நாட்ட வேண்டுமென்ற ஆசை ஆட்சியாளருக்கு இருக்குமானால் இதைச் செய்தே தீர வேண்டும்.

சுவிட்சர்லாந்து, கனடா, போன்ற பல நாடுகள், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளுக்கு தமது நிர்வாகத்தில் இடமளித்திருக்கின்றன. சுவிட்சர்லாந்தில் 4 மொழிகள் சம அந்தஸ்துடன் அரசாங்கத்தின் சகல துறைகளிலும் பாவிக்கப்படுகின்றன. கனடாவில் இரு உத்தியோக மொழிகள் உபயோகிக்கப்படுகின்றன. அதிக ஊழியர் தேவைப்படுமென்று சாட்டுக் கூறி ஏனைய சிறுபான்மையர் மீது வேற்றுமொழியைத் திணிக்க முயலவில்லை அந்நாட்டு அரசாங்கங்கள்.

ஆகவே, அந்நாடுகளைப் பின்பற்றி இங்கும் தமிழ் மொழிச்சட்ட விதிகளை அமுல நடத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழைச் சகல அரசாங்கத் துறைகளிலும் பயன்படுத்தும்படி ஆட்சியாளரை வற்புறுத்துகிறோம்.

தமிழ்மொழிச் சட்ட விதிகளை அமுல் நடத்துமாறு கோரி, தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களும் ஏனைய ஸ்தாபனங்களும் தீர்மானங்கள் மூலம் ஆட்சியாளரை வற்புறுத்தவேண்டும். தேவையானல், இதற்கான ஒரு நேரடிக் கிளர்ச்சியில் ஈடுபடும்படி தமிழரசு வாலிப முன்னணியினரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் மக்கள் ஆளப்படுவோராக உள்ள நிலை மாறுமட்டும் தமிழரசுக் கட்சியின் போராட்டம் ஓயாது"

## மலையகத்தில் அமிர்தலிங்கம் முழக்கம்!

"சிங்கள மக்களோடு தமிழ் மக்கள் சரிநிகர் சமானமாக வாழவே தமிழரசுக் கட்சி போராடி வருகிறது. சிங்கள மக்கள் ஆள்வோராகவும் தமிழ் மக்கள் ஆளப்படுவோராகவும் உள்ள நிலை மாறுமட்டும் நமது போராட்டம் ஓய மாட்டாது. தமிழினத்தின் வாழ்வில் இன்று இருள் சூழ்ந்திருக்கலாம் வடக்கு கிழக்கு மக்களைப் போல மலையகத் தமிழ் மக்களும் தமிழரசுக் கட்சியின் கிழ் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தினால் இழந்த உரிமைகளையெல்லாம் தமிழினம் மீட்டுக் கொள்ள முடியும்"

—இவ்வாறு டிக்கோயா, கிருமக்கொல்லை, சலங்கண்டி பொகவந்தலாவையைச் சேர்ந்த ராணிக்காடு ஆகிய தோட்டங்களில் சென்ற மாதஇறுதியில்நடைபெற்ற இ. தொ. கழகப் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார். அவர்தனது பேச்சில் மேலும் குறிப்பிட்டாவது

'மலைநாட்டு மக்களின் தலைவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள் அடிககடி ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாடுகளுககு போகிறார்கள். 'மாபெரும தலைவா' என்று பெருமையடித்துக் கொள்ளும் தருதலைவர் மாதம் ஒருமுறையாவது ஜெனிவாவுக்கு போய் வருகிறார்.

"தோட்டத்தொழிலாளர்களின் உழைப்பால் லட்சக் கணக்கில் சம்பாதிக்கும் இவர்கள அந்த தொழிலாளிகளுக்காக எதுவுமே செய்யவில்லை. மாறாக அவர்களை தங்களின் பதவி வேட்டைக்கு ஏற்ற பகடைக் காய்களாக உருட்டி வருகிறார்கள்.

### கூறு போட்டனர்

'இந்திய வம்சாவளி மக்களின வாழ்க்கையைச் சீர்திருத்தவும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அமரர் ஜவகர்லால் நேரு இலங்கைக்குவந்து'இலங்கை இந்தியர் காங்கிரஸ்' என்ற ஸ்தாபனத்தை நிறுவினார். ஆனால் பதவிப்பித்து பிடித்த சிலர் அந்தமாபெரும்ஸ்தாபனத்தை ஆளுக்கொரு பக்கமாய்ப் பிய்ததுக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களை கூறு போட்டுவிட்டார்கள்.

'இந்த பிரிவினால்தான் தொழிலாளர்களின வாழ்க்கை நாளுக்கு நாள் நசிந்து வருகிறது.

'மலைநாட்டு மக்களின் தலைவன் என்று சொல்லிக் கொண்டு சங்கம் வைத்திருப்பவர்கள் எல்லாம் பதவி வெறி பிடித்தவர்கள். தங்களுக்கு புகழ் பெருமை கிடைக்க வேண்டும்; தங்களை எல்லோரும் கௌரவிக்க வேண்டுமென்பதற்காகத் தான் சங்கம் வைத்திருக்கிறார்களே தவிர தொழிலாளிகளின் வாழ்வைச் சீர்படுத்துவதற்காக வல்ல. இவர்களின் இந்த சுயநலப் போக்கினால் அப்பாவி மக்கள் பலியாகி வருகிறார்கள்.



### தமிழரசுக்கு பதவி பெரிதல்ல

'ஒரு சிலருக்கு பெருமையோ பதவியோ பெறுவதற்காக தமிழரசுக்கட்சி மலைநாட்டுக்கு வரவில்லை.

எங்களுக்கு பாராளுமன்ற பிரதிநிதிகள் பதவி இருக்கிறது. என்னை வட்டுக் கோட்டை மக்கள் நான்கு முறைகள் தொடர்ந்து தங்களின் பிரதிநிதியாக தேர்ந்தெடுத்து பாராமன்றத்துக்கு அனுப்பியிருக்கிறார்கள். 1965ல் நடந்த பொதுத் தேர்தலில் 11 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளால் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இனியும் அவர்களுடைய பிரதிநிதியாக தேர்ந்து எடுககப்படுவேன். எனவே, எனக்கு உங்களிடம் வந்து தான் பதவி தேட வேண்டும் என்பதில்லை.

### எங்கள் நோக்கம்

'சுயநலமிகளால் ஏமாற்றப் பட்டு நொந்து நலிந்திருக்கும உங்களுக்கு சேவை செய்வதற்காகவே இலங்கை தொழிலாளர் கழகத்தை நிறுவியிருக்கிறோம். வடக்கு கிழக்கு மாகாணங்களை தமிழரசுக் கட்சியின் கீழ் ஐக்கியப்படுத்தியதைப் போல் மலையகத் தோட்டத்தொழிலாளர்களை இ.தொ. கழகத்தின் கீழ் ஒன்று படுத்தி, தமிழ் மக்களின் இழந்த உரிமைகளுக்காக போராடுவதே எங்களின் நோக்கம்.

'சிங்கள மக்களோடு தமிழ் மக்கள் சரிநிகர் சமானமாக வாழவே தமிழரசுக் கட்சியினர் விரும்புகின்றனரே யன்றி ஆள்வார்- அடிமைகளாக அல்ல. சூரியனை கிரகணம் மறைத்திருப்பது போல தமிழினத்தின் வாழ்வில் இருள சூழ்ந்திருக்கலாம். ஆனால் அது! நீடிக்காது. வடக்கு கிழக்கு மக்களைப் போல் மலையகத் தமிழ் மக்களும் தமிழரசுக் கட்சியில் திரண்டு போராட்டம் நடத்தினால் இழந்த உரிமைகளை எல்லாம் தமிழினம் மீணடெடுக்கலாம்.'

---

## இவ்வாண்டு முழுவதும் வள்ளுவருக்கு விழா எடுப்பீர்!

### இரத்தினம் வேண்டுகோள்

திருவள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு நிறைவுவிழாவினை 1969-ம ஆண்டு முழுவதிலும் சிறப்பாக வைகாசித் திங்கள் முழுவதிலுமகொண்டாடுமாறு இலங்கைத் தமிழ்மறைக் கழகம் தமிழ் கூறு நல்லுலகமெங்குமுள்ள தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

1969-ம் ஆண்டுத் திருவள்ளுவர் திருநாள் மே 31-ம் நாள் சனிக்கிழமை மகிழமையாகும். இந்த நாளை முன்னைய ஆண்டுகளைப் போல ஒவ்வொரு வீட்டிலும தமிழ் மக்கள் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்றும் தமிழ்மறைக் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் பா. உ. உலகமெங்குமுள்ள தமிழ் மக்களைக் கேட்டுள்ளார்.

பியூச்சி, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, அந்தமான் தீவுகள், மொறிசியசு, தென் ஆபிரிக்கா, இந்தியா முதலிய நாடுகளிலுள்ள தமிழ் மக்களின் நிறுவகங்களுடன் தமிழ் மறைக் கழகம் தொடர்பு கொண்டு இரண்டாயிரம் ஆண்டு நிறைவுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஒழுங்குகள் செய்கின்றது.

திருவள்ளுவர் நினைவு மணிமண்டபம் ஒன்றை எழுப்புதற்கும் இம் மண்டபத்தில் திருக்குறள் நூல் நிலையம் ஒன்றை நிறுவுதற்கும் தமிழ்மறைக் கழகம் திட்டமிட்டுள்ளது. திருவள்ளுவர் முத்திரை வெளியிடுமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்பதென்றும் இரண்டாயிரம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாட இலங்கை அரசாங்கத்தின் ஆதரவையும் பெறுவதென்றும்கழகம்முடிவு செய்துள்ளது. இக் கழகத்தின் திருக்குறள் மாநாடு மேத் திங்கள் கடைசியில் நடைபெறும்.

தமிழ்நாட்டரசும் இந்த நிறைவுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடப் பெரு முயற்சி செய்கின்றது.

ஊர்தோறும் திருக்குறள் மனனப்போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி முதலியவற்றை நடத்துதல் திருக்குறள் ஊர்வலங்கள் மாநாடுகள் நாடகங்கள் நடத்துதல், சிறப்பு மலர் வெளியிடுதல் திருக்குறள் மலிவுப்பதிப்பு வெளியீடல், முதலிய பல பணிகளை பொது நிலையங்களும் கல்வி நிலையங்களும் உள்ளூராட்சி மன்றங்களும் செய்ய வேண்டுமென்றும் தமிழ்மறைக் கழகம் கேட்டுள்ளது.

---

## இலக்கிய உலகு

-"வேதாளம்"-

### எழுத்தாளர்களின் "கெட்ட பழக்கம்"

நமது எழுத்தாளர்களுக்கு ஒரு "கெட்ட பழக்கம" இருந்துவருகிறது. எழுத்துலகில் தலைதூக்கி நாலும்பர் அறியககூடிய நிலையை அடைந்து—தமக்கென ஒரு வாசகர் கூட்டத்தையும் சிருஷ்டித்துக் கொண்டதும், 'அஞ்ஞாத வாசம்' மேற்கொண்டு விடுவது தான அந்தக் 'கெட்ட பழக்கம.'

ஈழத்தின் இலக்கியபிரம்மாக்கள் பலர் இன்று என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதே சாதாரண வாசகனின கேள்வி. இந்தப் பிரம்மாக்கள் வளர்ந்துவரும் நிலையில் இருந்தபோது வாசகர்களுக்கு தளர்ச்சியின்றி நல்விருந்து கிடைத்து வந்தது. ஆனால் அவர்கள் 'பெரும் எழுத்தாளர்கள்' என்னும் நிலையை என்று அடைந்தார்களோ அன்றே அவர்களது இலக்கிய ஊற்றும் அடைபட்டுவிட்டதுபோலும்!

புதுமை லோலன், வரதர், வ. அ. இராசரத்தினம், இரசிகமணி, நவம, சிற்பி, எஸ். பொன்னுத்துரை போன்றவர்களின் எழுத்துக்களைப் படித்து எத்தனை நாட்களாகிவிட்டன என்பதே வேதாளத்தின் கேள்வி.

இவர்களுக்குள் எஸ். பொ., வ. அ, இரசிகமணி ஆகியோர் கார்த்திகைப் பிறை கண்டதுபோல அவ்வப்போது எழுதி வந்தாலும், புதுமைலோலனும், வரதரும், எழுத்துலகிலிருந்து ஓய்வு பெறறுவிட்டார்களா?

செம்பியன் செல்வன், செங்கை ஆழியான் போன்ற இளைஞர்களும் இலக்கியப் படைப்பில் ஆரம்பத்தில் காட்டிவந்த ஆர்வம் இப்போது குறைந்துவிட்டதுபோற் தோன்றுகிறது.

சு. வே. யும் சொக்கனும் தான் இப்போது அடிக்கடி எழுதி வருகிறார்கள்.

இலங்கையிலுள்ள பெண் எழுத்தாளர்களில் சிறிதும் சோர்வற்று இலக்கியப்பணியில் ஈடுபட்டிருக்கும் ஒரேயொருவர் பா. பாலேஸ்வரி அவர்கள்தான்.

பழம்பெரும் எழுத்தாளர்கள் தூக்கம் விழித்தெழுவார்களா? அதன் பயனாக இடையிடையே என்றாலும் தரமான இலக்கியப் படைப்புக்களைப் படிக்க முடியுமாவென்ற கேள்வியை வேதாளம் எழுப்புகிறது!

### காதல் கதை எழுதுதல் தீமையா?

"காதல் கதை எழுதுகிறவர்கள், காமக்கதை எழுதுபவர்கள் — இவர்களால சமுதாயத்துக்கு நன்மை கிடையாது. இத்தகைய கதைகளால் சமூகம் கட்டுப்போகிறது.

"எழுத்தாளன் உலகைத் திருத்த ஆரம்பிக்கு முன் தன்னைத் திருத்திக் கொள்ளவேண்டும்.

"மண்வாசனை என்ற பெயரில் கொச்சை கொச்சையாக எழுதக்கூடாது. பேசுவதுபோல எழுதுவது தவறு; எழுதுவதுபோலப் பேசவேண்டும் "

— இத்தகைய கருத்துக்களைக் கூறுவது வேதாளமல்ல. அண்மையில் இலங்கை வந்திருந்த முத்தமிழ் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம அவர்கள் சிந்திய கருத்துக்களே இவை.

### அங்கும் இங்கும்

19ம் நூற்றாண்டில் தமிழ்த்தொண்டில் ஈழம் முன்னணி வகித்தது. ஈழத்து நூல்களையும், தமிழ் நாட்டு நூல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வருங்காலத்தில் தமிழ் நாட்டிற்கு வழிகாட்டக் கூடிய நிலையிலிருக்கிறது.

தமிழகத்தில் தமிழ்ப் பண்பாட்டிற்கமையாத தரங்கெட்ட நூல்கள் திடீர்திடீரென்று வெளி வருகின்றன. இந்நூல்கள் விற்பனையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவை.

ஈழத்தில் தமிழ்ப் பண்பாட்டிற்கமையவே நூல்களை வெளியிடுகிறார்கள். இங்கு 40 சிறுகதைத் தொகுதிகளும் 50 நாவல்களும், 50 இலக்கிய நூல்களும், 30 நாடக நூல்களும், கடந்த 15 ஆண்டுக் காலத்தில் வெளியிடப்பட்டுள்ளன.



தமிழ்நாட்டில் உடலை வளர்க்க நூலை வெளியிடுகிறார்கள். இங்கு தமிழை வளர்க்க நூல்களை வெளியிடுகிறோம். அங்கு வீடு கட்டுவதற்காக நூல்களை வெளியிடுகிறார்கள். இங்கு வீடுகளை விற்று நூல்களை வெளியிடுகிறாகள்.

—இக்கருத்துக்களை உதிர்த்தவர் இரசிகமணி கனக செந்திநாதன். யாழ்ப்பாணம் வந்திருந்த மதுரை தமிழ் எழுத்தாளர்சங்க செயலாளர் திரு. சீனிவாசனுக்கு யாழ். இலக்கிய வட்டம் அளித்த விருந்து பசாரத்தின் போதே, மேற்கண்ட கருத்துக்களை திரு. செந்திநாதன் தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்டையத் தமிழர்களி...

# கலையழகுடன் மிளி...

## பொங்கல் திருநாளில் தமிழர் இ...
## எழில் குலுங்கட்டும்! இன்பம் ...

தமிழர் திருநாள், அந்த ஊருக்கே மகிழ்ச்சி தரும் நாள்! எனவே, ஊர் மக்கள் அனைவரும், விழாக் கோலம் பூண்டிருக்கும் அந்நாள், உழைப்புக்கும், அறிவுக்கும், எழிலுக்கும். ஏற்றத்துக்கும் ஊர் மன்றம் புகழ்மாலை சூட்டிப் பெருமைப்படுத்த வேண்டும்.

உழவுத்திறன் காட்டச் சொல்லி, உழவர்க்குப் பரிசு அளித்தல்.

வலிவுத்திறம் விளக்கிடும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தி வெற்றி கொள்வாருக்குப் பரிசளித்தல்.

நேர்த்தி மிக்க ஆடை நெய்தவர்க்குப் பரிசு.

ஊர் மக்கள் நோய் தீர்த்த உத்தமர்க்குப் பரிசு.

முதல்தரமான பசு.

நல்ல காளை.

அழகான கன்று.

எடுப்பான தோற்றமுள்ள சேவல், கோழி.

அழகான குழந்தை.

ஆடல் பாடலில் வல்லோர்.

புதிய கவிதைகள் புனைந்தோர்.

நல்ல ஏடு தருவோர்.

இப்படிப்பட்ட சிறப்பு இயல்புகளுடையோரைத் தேர்ந்தெடுக்க ஊர் மன்றம் கூடி, பரிசளித்து, மகிழ்ந்து கொண்டாட வேண்டும்.

அன்றலர்ந்த பூ தொடுத்த அழகான மாலையோ,

புத்தாடையோ,

பொற்பதக்கமோ,

பரிசுப் பொருள், எதுவாக இருப்பினும், அன்று பெறுவதிலே ஓர் தனி மகிழ்ச்சியுண்டு; அத்தகைய ஓர் ஏற்பாடு விழாவினுக்குச் சிறப்பளிக்கும்.

களம் சென்று மட்டுமே உள்ளவுரம் காட்ட வேண்டும் என்று தமிழர் இருந்தார் இல்லை.

ஊரார் கண்டு மகிழ, தம் பையோத்தவர் வியந்திட, வீர விளையாட்டுகளில் ஈடுபட்டு, வெற்றி பெற்று விருது பெற்றனர்; விழாக்களிலே இவை தனிச் சிறப்பான இடம் பெற்றிருந்தன,

மல்லர்கள் தமது திறம் காட்டினர்.

மாடு அடக்குதல், வீர விளையாட்டாகத் திகழ்ந்தது.

கூடிப்பாடுதல், கைகோத்து ஆடுதல், இவை மகிழ்ச்சிப் பெருக்கைக் காட்டின.

விழாக்களில், ஈடுபடும் போது புது எழிலைப் பெற்றனர்—அணிபணியாலும் ஆடை வகையாலும் ஆடவரும் ஆரணங்குகளும்.

செல்வம் சிறந்தது என்பதனை எடுத்துக் காட்டுவனவாக, விழாக்கள் இருந்து வந்தன என்பதுமட்டுமல்ல, விழாக்கோலம், கலை அழகு வளர்ந்திட, வாய்ப்பு அளித்தது என்பதும் தெரிகிறது, இலக்கியம் பயிலும் போது'

கசங்கிய கண்ணினராக கூப்பிய கரத்தினராக, வாழ்வைச் சுமையாகக் கருதிக் காதலை வெறுத்த மாதரை மாயப் பிசாசு என்று இழித்துக் கூறி, தமிழர் வாழ்ந்தாரில்லை.

வாழ்க்கையும் ஒரு கலை என்று அறிந்திருந்தனர்.

வாழ்க்கைக்கலையினை விளக்கத் தனியாக நூலொன்று தந்தாரோவெனில், இல்லை. ஆனால் அறநெறி உரைத்திட தமிழ்ப்புலவோர் ஆக்கி அளித்த காப்பியங்களிலேயே, மக்கள் வாழ்ந்த வகையினை அழகுற எடுத்துக் கூறும்போது, கலை அறிவுடன் அவர் தம் வாழ்க்கை அமைந்து இருந்ததை எடுத்துக் காட்டினர்.

பூம்புகார், மதுரைமாநகர் இரண்டிலேயும், மாந்தர் வாழ்க்கை, சிறப்பாக மகளிர் வாழ்க்கை இருந்த விதத்தை, படம் பிடித்துக் காட்டும் பான்மையிலே தந்தவர் துறவி இளங்கோ அடிகள்.

மலரணிக் கொண்டை மாதர்க்கு அழகு!



இளங்கோ அடிகள், மதுரை மகளிர், மலரணிந்து மகிழ்ந்திருந்தனர் என்று மட்டுமல்ல; மலர்கள் பல வண்ணங்களாக உள்ளன அல்லவா? அவற்றினை ஒன்றுகத் தொடுத்து அணிந்தனர் என்பதையும் கூறுகிறார்.

மலர் மணம் தருகிறது! எனவே, மாதர் தம் கூந்தலுக்குச் சேருகிறது.

ஆனால் இது கலை அழகும் பெறுகிறது. கலை அழகு

உணர்வு ...
மகளிர் ...
கிறது.
குவளை ...
செங்கழு...
றினைத் ...
கொண்ட...
களார் ...

...ந்த ...
... மகளி...
டன் ...
திருந்தன...
முத்துடை...

சில...
வாழ்...

செல்வ...
ர்வு, வா...
திடாத ...
வும் வின...
மதுரை ...
குவளை, ...
செங்கழு...
வற்றை ...
தொடுத்...
என்று ...
கிறது.

வாழ்க்...
தல் தான்...
மகளிர் ...
வாழ்ந்த...
கள். இ...

இல்லறஇன்பம், மாண்புடையது என்பதைச் சுவைபட எடுத்துக்காட்டும்விழாவாக, பொங்கற் புதுநாள் இருப்பதனால் தான், தம்பி! தமிழகத்திலே புதியதோர் எழில் அந்நாளில் பூத்திருக்கிறது.

வேட்டுச்சத்தம் கொட்டுமுழக்கு, இல்லை!

தாளமும் மேளமும் தோற்றிடும் அளவில் கைலையும் வைகுந்தமும் கிலிகொண்டு கிடுகிடுத்து, ஆங்குள்ள கடவுளர் அவரவர் வாகனம் கிடைத்திடினும் மேய்ந்திட எங்கேனும் போயிருப்பினும், இனியும் தாமதித்தால், இக்கூச்சல் நம் உலகினைத் துளைக்கும் என்று அஞ்சி ஓடி வந்து, என்ன வேண்டும்? என்று கேட்டு, வரம் தந்து போக வேண்டும் என்று கூறும் வகையில்' கோவிந்தன் பெயரையோ பரமசிவன் நாமந்தனையோ பல்வேறு வகையான ஒலியாலே எழுப்பிடும்' பஜனைக் கோஷ்டிகள், பாற்பொங்கல் நாளன்று இருப்பதில்லை.

வளை ஒலி எழும்பிடும்; வண்ணக் கலவையால் கோலம் போடுவர்! வீடு அழகு பெறும்; வீட்டுளார் புத்தாடை புனைவர்; மாடு கன்று நீராட்டல்பெறும்: அவற்றினுக்கும் புதுக் கோலம் புனைவர்; மஞ்சள் இஞ்சியும், அவரையும், துவரையும், பூசுணையும் பிறவும் கொட்டி இருக்கும்! வாழையுடன் கரும்பிருக்கும் வடித்தெடுத்த சோற்றினிற் சுவையும் குழம்பியிருக்கும்; உண்டு மகிழ்ந்திருப்பர்; உரையாடிக் களித்திருப்பர்; இது தமிழர் திருநாள்.

# வட்டக்கச்சிக் காணிப்பிரச்சினைய...
# எத்தர்களின் ஏமாற்று எத்தனை நாளைக்கு...

## பொய்சொல்லும்வாய்க்கு பொரியும் கிடையாது—இதைப் புரிந்து கொள்வீர்!

சில நாட்களுக்கு முன் யாழ்ப்பாணக் கச்சேரி உத்தியோகத்தர் ஒருவர் உவகையுடன் எனக்கு ஒரு செய்தியை உரைத்தார். ''காணி நீர்ப்பாசன மின் அமைச்சர் உங்களுடன் சீறி விழுந்தார். பைல்களைத் தூக்கி வீசினார்'' என்று யாழ்பபாணக் கச்சேரியில் ஒரு ''பச்சோந்தி'' ஒரு பொய் வதந்தியைப் பரப்பிற்று. ஆனால் மூன்று நாட்களுள் அந்தப் பச்சோந்திக்கு ஒரு பெருந்தண்டனை கிடைத்துவிட்டது. நீதி வழுவாமல் நியாயத்துக்காகப் போராடுபவர்களுக்கு அநியாயம் செய்பவர்களைத் தெய்வமே தண்டிக்கும் என்பதற்கு இது ஓர் உதாரணம் என்று அந்த உத்தியோகத்தர் கூறினர்.

### காணிப் பிரச்சினை

பழைய வட்டக்கச்சிக் காட்டை அத்துமீறி வெட்டிப்பிடிக்கப் பல வழிகளிலே சூழ்ச்சி செய்யும் சில முதலாளிமாரும் அவர்களைச் சேர்ந்தோரும் யாழ்ப்பாணக் கச்சேரி உத்தியோகத்தர் இருவருடைய துணைகொண்டும் ஓர் அமைச்சருடைய சிபார்சுக் கடிதம் பெற்றும் காணி நீர்ப்பாசன மின் அமைச்சரிடம்—அவருடைய நிரந்தரச் செயலாளர் திரு. ம. சிறீகாந்தா விடுமுறைக்குச் சென்றபொழுது—உணவு உற்பத்தி போர்வையிலே காணியை அபகரிக்க ஒரு கட்டளையைத் தமக்குச் சாதகமாகப் பெற்றிருந்தார்கள்.

இதனை அறிந்தபொழுது கட்டளையை மாற்றுமாறு நான் அமைச்சரைத் தந்தி வாயிலாகக் கேட்டிருந்தேன். புதிய அரசாங்க அதிபருக்கும்நிலைமையைவிளக்கினேன். அமைச்சருடைய புதுப்பணிப்பு வரும்வரை தாம் இவ்விடயத்தில் செய்யப்பட்ட வேலைகளை நிறத்தி வைப்பதாக அரசாங்க அதிபர் எனக்கு அறிவித்திருந்தார்.

### நாலுபேர் முன்னிலையில் இட்ட கட்டளை

நான் காணி நீர்ப்பாசன மின் அமைச்சருடன் 25.11.68இல் இந்தக்காணி விடயம் பற்றிப் பேசினேன். அவரை நான் அவருடைய அலுவலகத்திற் சந்தித்துப் பேசி அவர் கட்டளை பிறப்பித்தபின் வெளிக்கிடும்வரையும் அமைச்சருடைய நிரந்தரச் செயலாளர் திரு. சிறீகாந்தா அவர்களும் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரையும் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்களான ... விஜயசுந்தராவும் என்னுடனே அமைச்சருடைய அலுவலகத்திலே இருந்தார்கள்.



கா. பொ. இரத்தினம் பா. உ.

அமைச்சர் ''இக்காணி பற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நிறுத்தும்படியும், காணிக் கச்சேரி நடத்தி காணிபெறத் தகுதி உடையவர்கள் பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும், எனது முன்னிலையில் — திரு. சிறீகாந்தா முன்னிலையில்— மூன்று பாராளுமன்ற உறுப்பினர் முன்னிலையில் கட்டளை பிறப்பித்தார். இக்கட்டளை யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டது. பிரதி எனக்கு அனுப்பப்பட்டது.

இதனை அறிந்து ஆத்திரங்கொண்டவர்கள் — தங்கள் சுட்டு வெளியாகிவிட்டதென்று பதறினவர்கள்— காணி எடுத்துத் தருகிறோம் என்று முதலாளிமாரை ஏமாற்றி அவரிடம் பணம் பறித்தவர்கள் தாம் தப்பிப் பிழைக்க இந்தப் பொய் வதந்தியைப் பரப்பினார்கள்.

என்னைத் தூற்றுவதால் இவர்கள் வாழவழி தேடினார்கள். பிழைக்கட்டும் என்று விட்டுவிட்டேன்; ஆனால் யாழ்ப்பாண கச்சேரியில் பரப்பப்பட்ட இப் பொய்ப்பிரச்சாரம் பின்னர் எழுத்து வடிவத்திலும் பரப்படபட்டமையாலேயே இந்தச் செய்தியை நான் வெளியிடுகிறேன்.

ஜி. ஜி. பொன்னம்பலத்தின் படத்தையும் பயன்படுத்தி அவருக்கும் பல்லக்குத் தூக்கியும் பல்லாண்டு பாடியும் வாழுதற்கு வழியின்றிவாடுபவர்கள் எத்தனை நாட்கள் பொய்சொல்லி மக்களை ஏமாற்றிப் பிழைக்கப் போகின்றார்கள்!

பொய் ...
குப் பொ...
தென்பது ...
னைக் காவ...
டும்.

வட்டக்...
சினை ஒரு ...
டம். முதல...
...ராட்...
...தயும் ...
எவரையும் ...
...ண்ணுப...
சிப் போரா...
பற்றி நான்...
ளுமன்ற ...
போகின்றே...
ழுது உண்...
உணர்வார்...

இந்தப் ...
எனது நி...
முன்னுள் ...
அதிபர் ...
திரன் அவ...
உடுப்பிட்டி...
உறுப்பினர்...
சிதம்பரம் ...
ளுமன்ற உ...
சிவசிதம்ப...
தம்முன்னி...
ளேன்.

அபி...
ரூபா...

தமிழரச...
சா...வே. ...
வெடுங்...
கொத்தன்...
விருத்தி ...
களுக்கு ...
செய்வதற்...
1, 15, 06...
யுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ரின் இல்லறவாழ்க்கை

# ...ளிர்ந்தது!

## ...ர் இல்லமெங்கும் ...பம் துலங்கட்டும்!!



உணர்வு மிகுந்தவர் மதுரை மகளிர் என்பதைக் காட்டுகிறது. அவர்கள் முல்லை, குவளை, நெய்தல், மல்லிகை, செங்கழுநீர்ப்பூ முதலியவற்றினைத் தொடுத்து அணிந்து கொண்டனர் என்று அடிகளார் கூறும்போது.

[illegible]ந்த மலர்களையும், மது[illegible] மகளிர் முத்தாரங்களுடன் தொடுத்து அணிந்திருந்தனராம். பாண்டிநாடு முத்துடைத்து அல்லவா!

### சிலம்பு காட்டும் வாழ்க்கை நெறி

செல்வம், சீர், கலை உணர்வு, வாழ்க்கையை வெறுத்திடாத தன்மை, இவ்வளவும் விளங்கும் வகையில், மதுரை மகளிர் முல்லை, குவளை, நெய்தல், மல்லிகை, செங்கழுநீர்ப்பூ முதலியவற்றை முத்தாரங்களுடன் தொடுத்து அணிந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

வாழ்க்கைஇவ்விதம்இருத்தல் தான் முறை; மதுரை மகளிர் இப்படி இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனை அடிகள் எப்போது காட்டுகிறார்? கண்ணகி கணவன் அன்பைத் திரும்பவும் பெற்று, புதுவாழ்வு தொடங்கப் பொருள் தேட முயலும் நோக்குடன் கோவலனுடன் வருகிறபோது!

மதுரை மகளிர், முத்தாரமும் மலரும் தொடுத்து அணிந்துள்ளனர்; வணிகக் கோமான் மகள், கண்ணகி இதனிலும் மேலாக, அணிபணிபூண்டு வாழ்ந்திடலாம்.

ஆனால், காற்சிலம்பு விற்றால் தான் கைப்பொருள் கிடைக்கும் என்ற நிலை!

என்றாலும், மகிழ்ந்துஇருக்கும் மதுரை மகளிரைக் கண்டபோது, புதுவாழ்வு

**அறிஞர் அண்ணா**

கிடைக்கும். அப்போது இது போல...! என்ற எண்ணம் கண்ணகிக்கும் தோன்றியிருக்குமோ என்னவோ!

காலத்துக் கேற்றபடி, தம்மை அழகுபடுத்திக் கொள்வது நுண்ணிய கலை உணர்வைக் காட்டுவதாகும்.

இப்போது ஜப்பான் நாட்டுப் பெண்கள் தமது இல்லத்தையும், தம்மையும் வண்ணங்களின் வகை அறிந்து அழகுபடுத்தும் நுண்கலை மிகுதியாகப் பெற்றவர்கள் என்று கண்டறிந்தோர் கூறுகின்றனர்.

காலத்துக்கு ஏற்ப, ஊர் கோலம் கொள்கிறது—இயற்கை அப்படிக் கோலத்தை மாற்றிக் காட்டுகிறது.

அந்தக் கோலத்துக்கு ஒத்ததுபோல ஆடை அணி புனைவது, கலை அழகினை நன்கு உணர்ந்தால் மட்டுமே முடியும்.

அத்தகைய கலை உணர்வு மதுரை மகளிருக்கு இருந்திருக்கிறதுஎன்பது வாடைக் காலத்துக்கு ஏற்ப அரத்தப் பூம்பட்டையை மகளிர் அணிந்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து தெரிகிறது.

பூம்புகார்நகரத்துப்பெண்கள் பகலில் பட்டு ஆடையும் இரவில் பருத்தி ஆடையும் உடுத்தினராம்.

ஆரணங்குகள்மட்டுமல்ல; ஆடவரும் அணிபணி பூண்டு தம்மை அழகுபடுத்திக் கொண்டனர். வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொற்குவளை மலர்களை ஆடிடும் விறலியர் அணிவராம்.

வெள்ளியால் நார்! பொற்குவளை!—வண்ணங்களை அடுக்கி அழகுபெறும் கலைத்திறனை, கலையால் கவர்ச்சியூட்டும் விறலியர் பெற்றிருப்பது மிகப் பொருத்தமல்லவா?

ஆடவரோ, கடகம், கழல் எனும் அணிகள் பூண்டிருந்தனர்.

அவை செல்வுவன மட்டுமல்ல; வீரவெற்றிகள் பெற்றவர் என்பதையும் காட்டுவன.

அணிவன, சூடுவன, என்பதில் மட்டுமல்ல, பூசுவனவற்றிலே, பல பொருள், பல முறைகள் இருந்திருக்கின்றன.

மாதவி, தன் கூந்தலை பத்து வகைப்பட்ட துவர், ஐந்து வகைப்பட்ட விரை, முப்பத்து இரண்டுவகை ஓமாலிகைகள் முதலியன ஊறின நல்ல நீராலே கழுவி வாசனைப் புகையூட்டி கஸ்தூரி, சவ்வாது, கலந்த தைலத்தைத் தடவி அழகு படுத்திக் கொண்டாள், என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

இப்படியெல்லாம் செய்து, கோவலனை மயக்கினாள் என்று கூறுவர், நுனிப்புல் மேய்வோர்.

எண்ணிப்பார்த்து வியப்படைய வேண்டியது அஃது அல்ல. அவ்வளவு இன்பமாகச், செல்வமாகக் கலைஅழகு உணர்வுடன், காட்சிப் பொருளாக வளர்ந்த அந்த ஆடலழகி, கோவலன் தன்னைத் துறந்தான், பின்னர் வெட்டுண்டு இறந்தான் என்ற உடன், என்ன ஆனாள்? எல்லாம் துறந்தாள்!!

அவ்வளவு அழகூட்டும் முறைகளும், அவனுக்காக:

(9-ம் பக்கம் பார்க்க)

---

# ...னயில் ...க்கு?

பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாதென்பது பழமொழி. இதனைக் காலம் விரைவிற் காட்டும்.

வட்டக்கச்சிக்காணிப்பிரச்சினை ஒரு வர்க்கப் போராட்டம். முதலாளிகள்-ஏழைகள் [illegible]ராட்டம். பணத்தால் [illegible]தையும் சாதிக்கலாம்; எவரையும் வாங்கலாம் என்றெண்ணுபவர்களின் சூழ்ச்சிப் போராட்டம். இதனைப் பற்றி நான் விரைவில் பாராளுமன்றத்தில் பேசப் போகின்றேன். அப்பொழுது உண்மையை மக்கள் உணர்வார்கள்!

இந்தப் பிரச்சினையிலே எனது நிலை என்ன என்பதை முன்னாள் பரந்தன் தபால் அதிபர் திரு. இராமச்சந்திரன் அவர்களுக்குக் கூட உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. சிவசிதம்பரம் ஆகியோர் தம்முன்னிலையில்விளக்கியுள்ளேன்.

---

### அபிவிருத்திக்கு ரூபா 1,15,000

தமிழரசுத் தலைவர் திரு. [illegible] வே. ஜே. முயற்சியால் வெடுங்கேணியிலுள்ள கொத்தன் குளத்தை அபிவிருத்தி செய்து விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்வதற்கு அரசாங்கம் 1, 15, 060 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

---

# தங்குமடம்

பொங்கலோ பொங்கல். வாங்க. நல்லநாள் அதுவுமாக ஏன் இப்படிப் பார்க்கிறீங்க?

சென்ற பல வாரங்களாக சுமைதாங்கியைக் காணாது நீங்களெல்லாம் ரொம்பக் கவலை அடைந்திருப்பீர்கள். அதிலென்ன சந்தேகம், கவலை அடைந்தீர்களென்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

ஏதோ? என்னவோ? என்று நீங்கள் கவலைப்பட்டு எழுதாத கடிதங்களெல்லாம் இங்கே மலைபோல் குவியாது விட்டாலும்...

என்ன அப்படிப் பார்க்கிறீங்க இதென்ன சுமைதாங்கி இப்படி எழுதுகிறதே என்றுதானே யோசிக்கிறீர்கள் கவலையை விடுங்கள்.

இப்படித்தான் அன்றும் "கவலையை விடுங்கள், காலை விடுங்கள்" என்று உரத்துக் கத்தப்போய், அதுவரை, தன் முன்னாலிருந்த கண்ணாடியில் பின்னாலிருந்த மினிஸ்கேட் அணிந்திருந்த பசுவைப் பார்த்துக்கொண்டே பஸ்ஸைச் செலுத்திக் கொண்டிருந்த சாரதி மறந்துபோய் என்மேல் வந்து மோதினானே என்னவோ எனது 'தோள்மூட்டில் நல்ல அடி. சாதுவான உடைசல் அவ்வளவுதான்.

'சுமைதாங்கிதானே பரவாயில்லை, கொஞ்சம் மண்ணையும் கல்லையும் சீமெந்தையும் குழைத்து எடுத்து அப்பி முன்பிருந்ததுபோல் சரிப் பண்ணினால் போச்சு' என்று நீங்கள் கருதலாம்.

என்னை ஏனென்றே யாரென்றோ கவனிப்பார் யாருமில்லை. எல்லோர் [illegible] அந்தப் பாழாய்ப்[illegible] பஸ்ஸின்மேல் தானிருந்தது: சில இளசுகளின் பார்வை மினிஸ்கேட்டின் மேலும் இருந்தது.

'அடடா, பஸ் மட்காட் இப்படி நெளிந்துவிட்டதே' என்று கவலைப்பட்ட ஜன்மங்கள் 'பாவம் இந்தச் சுமைதாங்கி இப்படி உடைந்துவிட்டதே' என்று யாராவது கவலைப்படவேண்டுமே; உம்ஹூம்! பயன் பூஜ்யந்தான், காலம் கெட்டுப் போச்சு.

இப்படியே மனம் உடைந்தபடி சென்ற மாதம் முழுவதும் ஆறுத்துயரத்துடன் இருந்த என்னை சென்றவாரம் புதுவருடத்துடன்தான் ரிப்பேர் பண்ணினாங்க. அதனால் தான் பொங்கலுமதுவும் நல்ல நாள் பார்த்து உங்களையெல்லாம் மறந்துபோகாமல் தரிசிக்க நேர்ந்தது.

[illegible]புக்கு வருகிறது. சென்ற தைப்பொங்கலன்று தங்குமடத்தில் வந்து தங்கிய இருவர் தெருவால் சென்ற ஒரு பையனிடம் 'திரும்பிவரும்போது தங்களுக்கு வெற்றிலை பாக்கு வாங்கிவருமாறு பணம் கொடுத்துவிட்டனர். அந்தப் படுபாவிப்பயல் திரும்பிவரும்போது 'வெற்றிலை எங்கேயடா?' என்று கேட்டதற்கு 'மறந்து போச்சுங்க. வெடிப் புத்தகங்கள் கடையின் முன்னால் குவிந்து கிடந்ததில் உங்களுக்கு வெற்றிலை வாங்குவதற்குப் பதிலாக வெடிகளை, வாங்கிவிட்டேன். இந்தாங்க என்ற வண்ணம் அவர்களிடம் வெற்றிலைக்குப்பதிலாக வெடியலைக் கொடுத்துவிட்டுப் பையன் தன்பாட்டிற்குப் போய்விட்டான். அவர்கள் முகத்தில் அசடு வழிந்தது.

### "சுமை தாங்கி"

இதையேன் இங்கு சொல்றேன்னு தைப்பொங்கல் என்னா வெடிகள் தினம் என்று பசங்க நினைக்கிறாங்க. இல்லாட்டா இரவுபகலாக பணத்தை எரித்து இப்படிக் கரியாக்குவாங்களா?

கரி என்றதும் எனக்கு இன்னோர் ஞாபகம் வருகிறது. அந்த நிறமுடைய பெண்கள் அதிகம் ஆபத்தில்லை. இருந்தாலும் அழகான பெண்களால் ஆபத்து என்று அந்தக் காலத்தில் சொல்லிப்போனவங்களுக்கு வாயில் சர்க்கரை தான் போடவேண்டும். மன்னிக்கவும் சர்க்கரையென்றதும் 'எங்கே எங்கே' என்று நீங்களெல்லாம் ஆவலோடு என்[illegible] பார்ப்பது தெரிகிறது. பொங்கலுக்கே சர்க்கரை கிடையாமல் நீங்களெல்லாம் ரொம்பக் கயிட்டப் பட்டிருப்பீங்க.

கயிட்டப்பட்டு மினிஸ்கேட்டைப் போட்டிருக்கும் பெண்களால் பெரிய ஆபத்து என்பது இப்போது உங்களுக்கும் தெரிந்துபோச்சு. அப்படி உங்களுக்கும் தெரியப்படுத்துவதற்காகத் தான் சாரதி என்னை அடித்து உடைத்தான்போலும்.

பரவாயில்லை, ஏதோ இந்த மட்டும் தப்பிப் பிழைச்சேன். உங்களுக்கும் எனது பொங்கல் வாழ்த்துக்கள்.

---

# வள்ளுவருக்கு மணி மண்டபம்

யாழ். பொது நூல் நிலையத்திற்கருகே திருவள்ளுவர் மணி மண்டபம் அமைக்க நிலம் வழங்குமாறு யாழ். மாநகரசபையை தமிழ் மறைக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சி செய்ய இரு வருடங்களுக்கு இருவருக்கு யாழ். மாநகர சபை பொருளுதவி செய்ய வேண்டுமென மற்றொரு தீர்மானத்தையும் தமிழ் மறைக் கழகம் நிறைவேற்றியுள்ளது.

தமிழ் மறைக் கழகத்தின் 17-வது திருக்குறள் மாநாடு சாவகச்சேரியில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறுகதை

# மானமிழந்த பின்...!

"புரட்சி பாலன்"

திறந்து கிடந்த ஜன்னல் வழியாக காலையிளங் கதிரவனின் கதிர்கள் தெறித்து வந்து முகத்தில் 'சுள்'ளென்று அடிக்கிறது. இளவெயிலின் இதமான உஷ்ணம் உடலுக்கு 'கதகதப்பைக்' கொடுக்க மீண்டும் படுக்கையில் புரண்டு படுக்கிறேன். இரவு பூராவும் விழிகள் உறங்கவில்லை. உள்ளத்தில் அமைதி இருந்தாலல்லவா உறக்கம் வருவதற்கு. நீண்ட நேரச் சிந்தனைக்கு முடிவுகாணுமலேயே விடிகாலைப் பொழுதில் உறங்கிப்போய் விட்டிருக்கிறேன். விடிந்து இளவெயில் இவ்வளவு தூரம் ஏறியதுகூடத் தெரியாமல் நன்றாக உறங்கியிருக்கிறேன். இரவு நன்றாக உறங்காமையால் கண்களிலே ஒருவகையான எரிச்சல் பரவியிருப்பதை உணர்கிறேன். மீண்டும் படுக்கையில் புரளுகிறேன்.

'சுந்தரம்...சுந்தரம்...' வெளிப்படலைக்கப்பால் நண்பன் மகேசனின் குரல் கேட்கிறது. எழுந்து 'ஒய்' என்று பதில் குரல் கொடுக்கக் கூட மனமில்லாமல் 'அவன் அறைக்குள் வரட்டும்' என்ற உணர்வுடன் படுக்கையில் கிடக்கிறேன். 'சுந்தரம்... சுந்தரம்...' என்ற மகேசனின் குரலைத் தொடர்ந்து வெளிப்படலை 'கிரீச்'சென்று திறந்து மீண்டும் 'தடால' என்ற ஓசையுடன் மூடிக்கொள்ளும் சப்தம் கேட்கிறது.

'சுந்தரம் இன்னும் எழும்பேல்லத் தம்பி... அறைக்குள்ள படுக்கிறான்...' அதைத் தொடர்ந்து எனது தயாரின் குரலும் வெளியே கேட்கிறது.

நான் அலுப்புடன் படுக்கையில் நிமிர்ந்து படுக்கிறேன். 'டக்... டக்...டக்...' எனது அறையை நோக்கி மகேசன் நடந்து வரும் காலடியோசை தெளிவாகக் கேட்கிறது.

'சுந்தரம்...என்னயிது... விடிஞ்சி இவ்வளவு நேரமாகியும் இன்னும் எழும்பேல்லயே...?' மகேசன் நித்திரைக்காரனைப்போல் பாவனைசெய்து கொண்டு கிடந்த என்னைப் பிடித்து உசுப்புகிறான்.

'ம்...ஆ...ஆரது...?' நான் அப்பொழுதுதான் கண் விழித்தவனைப்போல் எரிவு மிகுந்த கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டே எழுந்து படுக்கையிலமர்கிறேன்.

'ஏய் கும்பகர்ணு! விஷயம் தெரியுமா? நாமெல்லாம் 'குதிரை வால கி'யென்று பகிடிபண்ணுவோமே... அது ஆன் உடையார்ர பெட்ட பூமா...அவளல்லே காலமவிஷம் குடிச்சிட்டாள்...'

'என்ன? பூமா விஷம் குடிச்சிட்டாளா...? உண்மையாகவா?...' என்னையறியாமலே நான் வாய்விட்டலறுகிறேன். என்னுடலில் இதுவரையிருந்த அயர்வு சோர்வு எல்லாம் எங்கே போயிற்றென்று எனக்கே புரியவில்லை. மகேசனையே உற்று நோக்குகிறேன்.

'நான்கூட முதல்ல நம்பல்ல...உடையார்ர வீட்டுக்குப் போய் பார்த்த பிறகுதான் உண்மையென்ற விஷயம் தெரிஞ்சுது... அவங்க வீடு நிரம்பச் சனக் கூட்டமாகத்தானிருக்கு...நான் மாமா வீட்டுக்கு ஒரு அலுவலாகப் போக வந்தனான்... வழியில உன்னட்டயும் விஷயத்தைச் சொல்லிப் போட்டுப் போகலாமெண்டு தான் வந்தனான்...' மகேசன் என்னையே ஒரு கணம் உற்று நோக்குகிறான்.

'ஏன் இப்பிடித் திடீரெண்டு...?' நான் மகேசனை நோக்குகிறேன்.

'பூமாவின்ர சோதினை முடிவு நேத்து வந்துதாம்... அதில மனமுடைஞ்சி நஞ்சி குடிச்சிற்றாளாம்...'

'பாவம்... அநியாயமாக ஒரு சீவன் பலியாகிவிட்டது...'

என் இதயம் இரும்பாகக் கனக்கிறது.

'நான் போட்டு வாறன்...' மகேசன் என்னிடம் விடைபெற்றுக் கொண்டு நடக்கிறான். நான் என்ன செய்வதென்று தோன்றாமல் ஒரு சில வினாடிகள் அப்படியே அமர்ந்திருக்கிறேன்.

பூமாவின் முடிவை நினைத்து நினைத்து என்னுள்ளம் அழுது வடிகிறது. எழுந்து முகங் கைகால்களைக் கழுவிக்கொண்டு உடையாரின் வீட்டை நோக்கி நடக்கிறேன். சூரியன் உச்சியை நோக்கி ஏறிக்கொண்டிருக்கிறான். உடையாரின் வளவுக்குள் சனக்கூட்டம் நிரம்பியிருக்கிறது. நானும் கலங்கிய உள்ளமுடன் வளவுக்குள் நுழைகிறேன்.

'பூமா கடைசியில் இந்த முடிவுக்கு வருவாளென்று நான் நினைக்கவேயில்லை... அவள் சீரும் சிறப்புமாக வாழவேண்டுமென்றுதானே நானும் விரும்பினேன்... ஆனால் அவளுடைய வாழ்க்கை அஸ்தமித்துவிட்டதே?... என் இதயம் வேதனை தாளாமல் ஓலமிட்டலறுகிறது.

'என்ன நடந்தது...?' கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த அறிமுகமான ஒருவரைப் பார்த்துக் கேட்கிறேன்.

''தம்பி! எடுத்ததற்கெல்லாம் தற்கொலை செய்து செய்து இந்த உலகமே ரொம்பக் கெட்டுப் போய் விட்டது. சோதினையில் ஒரு முறை பெயிலெண்டா மற்றமுறை கவனமாகப் படித்துச் சோதினை எழுதிப் பாஸ்பண்ணிட்டுப் போறது. ...அதை விட்டிட்டு இப்படி தற்கொலை செய்யிறது எவ்வளவு அநியாயம்... வேதனையோடு அந்த மனிதர் என்னைக் கூர்ந்து நோக்குகிறார்.

'சோதினையில பெயிலெண்டதற்காகவா பூமா விஷம் குடித்தாள்?...இருக்காது...அதற்குக் காரணம்... அதுவாகத்தானிருக்க வேணும்... 'இதயத்துள் புதைந்து கிடந்த சம்பவங்கள் மீண்டும் தலைதூக்குகின்றன. பூமாவின் உறவினர்கள் வீட்டுக்குள் கூடியிருந்து ஒப்பாரி வைத்து அழும் ஒலி மிகத் தெளிவாகக் கேட்கிறது.

'எங்கடை ராசாத்தி...இப்படி அநியாயமா எல்லாரையும் ஏமாத்திப் போயிட்டியேம்மா...!' வீட்டுக்குள்ளிருந்து எழும் ஒப்பாரி ஓலத்தைக் கேட்டுநெஞ்சம் துடிதுடித்து அப்படியே மரமாக நிற்கிறேன்.

'இப்பொழு பூமாஎங்கே?'

''உள்ளேபிரேத பரிசோதனை நடக்குது...?'

பூமா...நீ இப்பொழுது பூமாவல்ல...பிரேதம்... ஜீவனற்ற உடல்... இன்னும் கொஞ்சநேரத்தில் அந்த உடல் கூட இந்த உலகை விட்டு மறைந்துவிடப்போகிறது. பல இளநெஞ்சங்களில் சலனங்களை ஏற்படுத்தித்திரிந்த நீ இன்று பிரேதமாகிவிட்டாய்... ஐயோ... பூமா...சோதனையில் பெயிலாகி விட்டதற்காகவா விஷம் குடித்து உயிரை மாய்த்துக் கொண்டாய்? இல்லை...இல்லவேயில்லை...... நீ இந்த முடிவைத் தேடிக் கொண்டதற்குக் காரணம்? எனக்குத் தெரியும்... நீ போலியைக் கண்டு ஏமாந்துவிட்டாய்...' என் இதயம் ஓலமிட்டலறுகிறது. தலையில் ஏதோவொரு சுமை அழுத்துவதாகவொரு உணர்வு. மெதுவாக வளவுக்குள் நின்ற பெரிய மாமரத்தில் சாய்ந்து கொள்கிறேன். பூமாவின் வீட்டுக்குளிருந்து அவள் பெற்றோர்கள் உறவினர்கள் எல்லோரும் ஒப்பாரி வைத்து அழும் ஓசை கேட்கிறது. நான...? என்மனம்...! எங்கோ...?

பூமாவும் நானும் ஒரே பாடசாலையிலே படித்தவர்கள். இளமைக் காலத்திலிருந்தே ஒன்றாகப் பழகியவர்கள். அவள் பருவமடைந்த பின்னர் அவளுடன் பழக நான் வெட்கப்பட்டேன். இருவருக்குமிடையிலிருந்த நெருக்கம் மிகவும் நீண்டுவிட்டது. இதனால் நாங்கள் ஒதுங்கியே வாழ்ந்தோம். என்றாலும் அவள்மீது நான் வைத்திருந்த அன்பு நாளடைவில் என்னுள்ளத்தில் காதலாகவே மலரவாரம்பித்துவிட்டது. ஆனால் நான் கொண்ட காதல் ஒருதலைக்காதல் என்பதை நான் ஒருநாள் அறிய நேர்ந்தபொழுது நானடைந்த வேதனை...?

'பூமா...' என்குரல் நடுங்குகிறது.

'என்ன...?' பூமா என்னை ஒருமாதிரியாகப் பார்க்கிறாள்.

'நீ எனக்குப் படிப்பதற்காகக் கொடுத்த இந்த இலக்கியப் புத்தகத்துக்குள் இந்தக் கடிதம் இருந்தது...' நான் நடுங்கும் கரத்திஞல் புத்தகத்திற்குள் இருந்த கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டுகிறேன்.

'ஓ...இந்தக் கடிதம்...நீங்கள் இந்தக் கடிதத்தைப் படித்து விட்டீர்களா...?' அவளுடைய குரல் ஏன் இப்படிக் கரகரக்கிறது? உண்மை வெளியாகிவிட்டதே என்ற பயத்தினலா? நான் அவளையே கூர்ந்து பார்க்கிறேன்.

'தவறுதலாக இந்தக் கடிதத்தைப் படித்துவிட்டேன் படித்ததினல்தான் என் காதல் ஒருதலைப்பட்சமானதென்பதை உணர்ந்து கொண்டேன்...'

'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?

'பூமா......நான் உன்னை மனப்பூர்வமாகக் காதலித்தேன்... ஆனல் விதி விளையாடிவிட்டது...'

'அப்படியா? நானும் அவரை மனப்பூர்வமாகத்தான் காதலிக்கிறேன்...'

'அவர் உன் ஆசிரியர்...'

'ஆமாம். அதனலென்ன? அவரும் இளைஞர்தான், அழகானவர். அறிவானவர்... என்னை என்றும் கைவிடமாட்டார்...'

'அழகில்தானே ஆபத்துமிருக்கிறது...?'

'நீங்கள் பொறாமைப்படுகிறீர்கள்...'!

'இல்லை. நீ யாருடன் வாழ்ந்தாலும் நலமுடனிருந்தால் எனக்கு அதுவே போதும்... நான் வருகிறேன்...!'

''என்ரை ராசாத்தி...! எங்களையெல்லாம் விட்டுப் போட்டுப் போக உனக்கு எப்படியடி மனசுவந்தது...?' ஐயோ... என்ரை ராசாத்தி வீட்டுக்குளிருந்து எழுந்த அழுகையோலம் என் சிந்தனையோட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கிறது. கால்கள் நிற்கமுடியாமல் தடுமாறுகின்றன. இதயம் இரும்பாகக் கனக்கிறது. பூமாவின் பிரேத பரிசோதனை முடியவில்லை. வீட்டை நோக்கி நடையை விரிக்கிறேன். வீட்டு வாசலில் நின்ற நாய் காலை நக்கி என்னை வரவேற்கிறது.

'தம்பி! பூமா நஞ்சி குடிச்சதெண்டதுஉண்மையாமே.

(9-ம் பக்கம் பார்க்க)

# வளரும் எழுத்தாளர்கள் (1)

யாழ்ப்பாணத்திலே வடமராட்சிப் பகுதியில் நெல்லியடியைப் பிறப்பிடமாகக்கொண்ட இளைஞர் க. பேரம்பலம் தற்பொழுது—நெல்லை க. பேரன்—என்ற புனைபெயரில் பத்திரிகைகளுக்கு எழுதி வருகிறார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் 'சுதந்திரனில்' ''எண்பது ரூபாய்'' என்ற சிறுகதையைஎழுதியதுடன்தான் சிறு கதையுலகில் பிரவேசித்தேன் என்று பெருமையோடு கூறிக் கொள்கிறார். சிறு வயதுமுதலேயே தமிழிலே தளராத பற்றுக் கொண்ட இவர் தமது கல்லூரிப் படிப்பின் பின்னர் ஈழத்தின் பிரபல தினசரிகள் இரண்டிற்குச் செய்தி நிருபராகக் கடமையாற்றினர்.

கல்லூரியிலேயே பல சமூக, நகைச்சுவை நாடகங்களை எழுதி மேடையேற்றியிருக்கிறார். நெல்லியடியிலே இவர் கதைவசனம் எழுதி நகைச்சுவைப் பாகமேற்று நடித்துள்ள ''புரோக்கர் பொன்னம்பலம், இறுக்கடா புட்டிசம், வாழவிடு, கல்லூரி மாணவர்கள் முதலிய நகைச்சுவை நாடகங்கள் மிகவும் பிரபலமானவை.

நெல்லியடி சண்முகானந்த நாடகசபையினர் அரங்கேற்றிய 'மாதவி பெற்ற மாணிக் [illegible] பாதை போன்ற சமூக நாடகங்களில் சாத்திரியாராகவும், வாத்தியாராகவும் கதாப் பிரசங்கியாராகவும் பல வேடங்களில் தோன்றி நடித்துள்ளார்.

யாழ்ப்பாணம் அரசினர் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழ் வணிகக் கல்வி பயின்ற இவர் அக்கல்லூரியில் தமிழ் இலக்கியமன்றம் நடாத்திய சிறுகதை,



நெல்லை க. பேரன்

கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பரிசுகள் பெற்றதுடன் கொழும்பு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தார் நடாத்திய அகில இலங்கை ரீதியிலான பாரதியின் கட்டுரைப் போட்டியிலும் வெள்ளிப் பதக்கங்களைப் பரிசாகப் பெற்றுள்ளார். இப்பொழுது கொழும்பு பிரதம தபாற் கந்தோரில் காசுக் கணக்கீட்டுக் கிளையில் கடமையாற்றி வரும் இவர், கடந்த வருடம் இந்தியாவிற்குச் சுற்றுப் பயணம் செய்து தமிழ் நாடு, வடநாடு புதுடில்லி முதலிய பகுதிகளுக்கு விஜயஞ்செய்ததுடன் பின்னர் தமது பிரயாண அனுபவங்கள் பற்றிய கட்டுரையொன்றையும் சமீபத்தில் ''டில்லியில் ஒருமாதம்'' என்ற தலைப்பில் ஈழத்தின் வாரப் பத்திரிகையொன்றில் தொடராக எழுதியுள்ளார்.

உலகத் தமிழ் நண்பர்களுடனும் பல்வேறு இன மக்களுடனும் கடிதத் தொடர்புகள், நேரடித் தொடர்புகள் வைத்திருப்பதாககூறும் இவர் இலங்கையிலும் இலக்கிய ரசிகர்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாக கூறுகிறார். இலக்கியச்சுவைமிகுந்த நண்பர்களின் கடிதங்களை மிகவும் வரவேற்கிறார். தனது தாய்மொழியாகிய தமிழுக்குத் தன்னலான பணியைச் செய்வதையே உயிர்மூச்சாகக் கொண்டுள்ள இந்த இளம்எழுத்தாளரை முதன்முதலாக அறிமுகம் செய்து வைப்பதில் சுதந்திரன் மகிழ்ச்சியடைகிறது.

—மகேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயப்பிரகாஷ் நாராயணன்

## இவ்வாரப் பிரமுகர்

இப்பொழுது இலங்கையில் தங்கியிருக்கும் சர்வோதயத்தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களை அவரது சீடர்கள் செல்லமாக ஜே. பி. என்று அழைத்து மகிழுகிறார்கள். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போதும் அதன்பின் நவ பாரதத்தை உருவாக்குவதிலும் ஜெயப்பிரகாசர் செய்துள்ள சேவைகள் அளப்பரிது.

ஜயப்பிரகாஷ் செய்துள்ள தியாகங்களை இந்தயா இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. இதற்கு ஒரு விததத்தல் அவரேதான் காரணம்!

சுமார் ஐம்பது வருஷம் கழித்து நடக்க வேண்டியவற்றை அவர் முன் கூட்டியே யோசித்து, அதற்காக வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கி விடுகிறார். அவருடைய சோஷலிஸம் இப்படித்தான் ஆரம்பமாயிற்று. 1930-ம் ஆண்டில் அவர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடடுச் சிறையில் இருந்தபொழுது இந்தியாவ்ல் சோஷலஸ சமுதாயத்திற்கு வித்திட்டார். நாட்டிற்குச் சுதந்திரம் கிடைப்பது உறுதி என்பதைத் தெளிவாகக் கண்ட அவர், சுதந்திரத்திற்குப் பின் ஏறபட வேண்டிய சமதர்மப் பொருளாதார அமைப்பைப் பற்றிச் சிந்தித்தார். ஆனல் சுதந்திரம் கிடைத்தபின் காங்கிரஸ் மகாசபை ஆவடியில் கூடி சோஷலிஸத்தைத் தன் குறிக்கோளாக ஏற்றுக் கொண்டபொழுது ஜே. பி. காங்கிரசில இல்லை. அதற்கு முன்பே அதனின்று வெளியேறிவிட்டார்.

இப்பொழுது எங்கு பார்த்தாலும், ஒரே சோஷலிஸப் பேசசு. ஆனல் இன்றைய ஜயப்பிரகாஷ் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுககவில்லை. தம பார்வையை இன்னும் அப்பால் செலுத்தி, சர்வோதயக் கனவு காண்கிருர். சோஷலிஸத்தின் முழுமை நிலைதான் சர்வோதயம். 'மக்கள், சட்டத்திற்குப் பயந்து சோஷலிஸம் பழகக் கூடாது. தங்களிடம் மிகுதியாக உள்ள செல்வங்களை அவர்களாகவே மனமுவந்து மற்றவர்களுக்குப் பகிர்ந்து தர வேண்டும்.' இதுதான் சர்வோதய இலட்சியம். இத்தகையசமுதாயத்தைத்தான் ஏற்படுத்த விரும்புகிருர் ஜே. பி. அவர் அன்றும் எதிர் காலத்தில் வாழ்ந்தார்; இன்றும் எதிர்காலத்திலேயே வாழ்கிருர்.

### வாழ்க்கை வரலாறு

ஜயப்பிரகாசரின் வாழ்க்கை இளைஞர்களுக்கு உணர்ச்சியூட்டும் வீர காவியம். அவர் பிறந்தது ஏழைக் குடும்பத்தில். பின்னர் அவர் அமெரிக்காவுக்குச் சென்று பெரிய படிப்புப் படித்துப் பெரும் பொருளீட்டும் வாய்ப்புக் கிடைத்தும் அதை உதறி எறிந்துவிட்டு நாட்டின் விடுதலை வேள்வித் தீயில் குதித்தார். அதில் உருக்கி வார்க்கப்பட்ட சொக்கத் தங்கமாக கட்சி வேறுபாடின்றி எல்லா மக்களுக்கும் சேவை செய்யும் சர்வோதய ஊழியராக இன்று ஒளி வீசி நிற்கிருர்.

ஜயப்பிரகாஷ், பீகார் மாகாணத்தில் சிதாப்த யாரா என்ற சிறிய கிராமத்தில் 1902, அக்டோபர், 11ம் தேதி பிறந்தார்.

ஏழைக் குடும்பம். இருந்தாலும் சிறுவன் ஜயப்பிரகாஷ், தன் பெயர்ப் பொருத்தத்தை நிரூபிப்பவன் போலப் படிபபில் பிரகாசித்தான். 1917-ல் மெட்ரிகுலேஷன் தேறினர். கல்லூரியில் சேர்ந்து படிக்கப் பணமில்லை. அதே வருடத்தில் அவருக்குத் திருமணமும் நடந்தது. டாக்டர் ராஜேந்திரப்பிரசாத்தின் மருமகளின் தங்கையான திருமதி பிரபாவதியை மணந்து கொண்டார்.

பத்தொன்பதாவது வயதில் அவருக்கு உபகாரச் சம்பளம் கிடைத்ததால் தொடர்ந்து கல்லூரியில் படிக்கத் தொடஙகினர். அவர் வாழ்க்கையில் ரயில் வண்டியை முதன் முறையாகப் பார்த்ததே அப்பொழுதுதான்!

இததனை ஆசைப்பட்டுத் துவக்கிய கல்லூரிப் படிப்பு முற்றுப் பெறவில்லை. இடையில் மகாத்மா காந்தி சுதந்திர சங்கநாதத்தை எழுப்பினர். அதனைச் செவிமடுத்த ஜயப்பிரகாஷ், தம் குடும்ப நிலை, பெற்ருேர்களின் கனவு முதலியவற்றைப் புறக்கணித்துப் போராட்டத்தில ஈடுபட்டார். 1922-ல் போராட்டத்தில் தேக்கம் கண்டது. ஜே.பி.படிப்பைத் தொடர விரும்பினர். ஆனல் இந்தியாவில் அல்ல-அமெரிககா போய்ச் சேர்ந்தார்.

மீண்டும் பணக் கஷ்டம். பழத் தோட்டங்களிலும், பண்ணைகளிலும், ஹோட்டல்களிலும், உருக்கு ஆலைகளிலும் தொழிலாளியாக வேலைசெய்து பணம் சம்பாதித்துப் படித்து எம். ஏ. பட்டம் பெற்ருர். அதன் பிறகும் அவர் சில ஆண்டுகள அமெரிக்காவிலேயே தங்கியிருந்து படிப்பைத் தொடாந்தார். அவர் அமெரிக்காவில் தங்கியிருந்த காலம் எட்டாண்டுகள். படித்த விஷயங்கள் விஞ்ஞானமும பொருளாதாரமும். அவர் சோஷலிஸத்தைப் பற்றி முதலில் அறிந்தது அமெரிக்காவில் தான்.

ஜே. பி. இந்தியா திரும்பிய பின் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். சோஷலிஸக் கருத்தை அது ஏற்கும்படி செய்ய வேண்டுமென்பது அவர் விருப்பம். ஆனல் அது நடைபெறவில்லை,

ஆகவே அவரும், அவர் ஆதரவாளர்களும் 1948ல் காங்கிரசை விட்டு வெளியேறினர். ஆனல் ஜே. பி. காங்கிரசுக்குத் திரும்பவில்லை. அவர் தோற்றுவித்த சோஷலிஸ்ட் கட்சியும் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. அதிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டு, ஆசார்ய விேனபாபாவேயுடன் சர்வோதய இயக்கத்தில் முழுக் கவனத்தையும் செலுததி வருகிருர்.

இப்பொழுது ஜயப்பிரகாஷுக்கு கட்சி அரசியலில் நம்பிக்கை இல்லை. நினைவெல்லாம் சர்வோதயத்தில் தான். அவர் காங்கிரஸிலேயே இருந்திருந்தால். இன்று பாரதப் பிரதமர் பதவியை அலங்கரித்துக் கொண்டிருப்பார் என்பதில் ஐயமில்லை.

---

## மானமிழந்த...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் அம்மாவை வேதனையோடு நிமிர்ந்து பார்க்கிறேன்.

'ஓமம்மா...பிரேதபரிசோதனை நடக்குது... நிக்க முடியல்ல... வந்திட்டன்...'

'தம்பி... உனக்கொரு கடிதம் இப்ப தபால்ல வந்தது. இந்தா...நானும்போய் அந்தப் பக்கம் தலையைக், காட்டிப் போட்டு வாறன்.

''என் கைக்குள் ஒரு கடிதத்தைத் திணிதுவிட்டு அம்மா பூமாவின் வீட்டை நோக்கி நடக்கிருள். நான் கடிதத்தைப் பிரித்து விழிகளை அதில் மேயவிடுகிறேன். என்ன இது? பூமாவின் கையெழுத்தல்லவா இது?

'மதிப்பிற்குரிய சுந்தரம் அவர்களுக்கு... வணக்கம் பல. இந்த உலகைவிட்டு நான் பிரியுமுன் உங்களையொருமுறை சந்தித்து உங்கள் மனதைப் புண்படுத்தியமைக்காக மனனிப்புக் கேட்டுவிடவேண்டுமென த் துடித்தேன். எல்லா விஷயத்திலும்நான் துரதிஷ்டக்காரிதான். இறுதி நேரத்தில் கூட இந்த ஆசை நிறைவேறவில்லை. நான் யாரை முழுமனதுடன் நம்பிகற்பையும் மானத்தையும் இழந்தேனே அவரே என்னைக் கைவிட்டுச் சென்று விட்டார். மானமிழந்தபின் இவ்வுலகில் வாழ்வேது? அதனல் இந்த உலகை விட்டே போகிறேன். இந்த அபாக்கியவதியை மன்னித்துவிடுங்கள்.

இப்படிக்கு,
''பூமா''

என் விழிகள் சுடுநீரைக் கொட்டுகின்றன.

(யாவும் கற்பனையே)

---

## எங்கே...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாள். திரும்பவும்துரதிஷ்டம்உன்னைத் தொடர்ந்தது. உனக்கு ஐந்து வயது நடக்கும் போது உன்தாயாரும் நெருப்புக் காய்ச்சலுக்காளாகி உன்னை என்கையில் ஒப்புவித்துவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டாள் அவளுக்கு என்மேல் அத்தனை நம்பிக்கை! என்று கூறிய போது அவர்குரல் தளதளத்தது. அவர் தன்பேச்சைச் சிறிது நிறுத்திக் கொண்ட போது ரகு அவரை அன்பொழுகப் பார்த்தான். அடுத்து என்ன கூறப் போகிருரோ என அவன் மனம் அடித்துக் கொண்டது.

—வளரும்

---

## 'தமிழினத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் காங்கிரஸ் பெருந்தலைவர் முயன்று வந்துள்ளார்.

''பண்டா-செல்வா உடன்படிக்கை, தமிழ்ப் பல்கலைக் கழகம், மாவட்ட சபை போன்ற ஆக்கபூர்வமான முயற்சிகள் ஒவ்வொன்றுக்கும் தமிழ் காங்கிரஸ் கல்லுக்குத்த முயன்று வந்திருக்கிறது. இத்தகைய கட்சியுடன் தமிழரசுக்கட்சி இணையும் பேச்சுக்கே இடமில்லை.

---

## பண்டைய...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனை மகிழ்விக்க! அவன் இல்லை. அவை இனி ஏன்? என்று துறந்தாள்.

'அலத்தகம்' எனும் செம்பஞ்சுக் குழம்பை, கால், உள்ளங்கை, இதழ், நெற்றி, நகம், இங்கெல்லாம் பூசி 'இலக்கணையார்' மண அறைக்கு அழைத்துக் கொண்டு வரப்பட்டார் என்று சிந்தாமணியில் காண்கிருேம்.

கால வேறுபாட்டினைக் கவனித்து, பெண்கள், மலர் சூடுவர், என்பதும், கூறப்பட்டிருக்கிறது.

முன்பனிக் காலத்தில், மகளிர், தம் கூந்தலில் மல்லிகையையும் அதன் அருகே வாகையையும் சூடிக்கொள்வராம்.

இளவேனிற் காலத்திலோ வெனில், கழுநீர் மாலையாம் குவளை மலராம்!!

தம்பி! இவ்விதமாக வெல்லாம், இல்லறத்திலே, வாழ்க்கைக் கலையழகுடன், வாழ்ந்து வந்தவர் தமிழர், முன்பு!!

தமிழரின் தனிச்சிறப்புடை திருநாளாம், பொங்கற் புதுநாளன்று-ஓர் நாளாகிலும்—எழில்குலுங்க, இன்பம் துலங்க, மகிழ்ச்சி பொங்க இருக்கவேண்டாமா? அதை அறிந்தே, தமிழகம் விழா நடத்தி மகிழ்கிறது.

---

## விவேகானந்தரும்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் இங்கே வந்து தமது மதத்தை பரப்பியபோது அதனிடம் சகல அதிகாரமும் இருந்தது. பணத்தைக் காட்டி, பதவியைக்காட்டி, திண்டாமையைக் காட்டி, இந்துமதத்தில் இருந்த ஊழல்களைச் சுட்டிககாட்டி, பலரை மதம் மாற்றுவது அவர்களுக்குச் சுலபமாக இருந்திருக்கலாம். ஆனல், ஒரு பிச்சைக்காரத்துறவி பணமின்றி, பதவியின்றி, பக்கபலமின்றி, தமது செய்கையினலும், நடத்தையினலும், நாவன்மையினலும் பலரை, அதிலும் வெள்ளைக்காரர் பலரை, அடிமை நாட்டிலே இருந்துவந்த சந்நியாசி தமது சிஷ்யர்களாக்கினரென்றால் அவரது மகிமையைக் கூறுவதற்கு வேறுசான்று தேவையற்றதே.

(வளரும்)





பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது

# கமலா பீடி

ஒருமுறை உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

**கமலா ஸ்டோர்ஸ்**

தந்தி: தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி: 3597—6522


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விவேகானந்தரும் மகாத்மாகாந்தியும்

## சமர்ப்பணம்

39 வருடங்கள் மாத்திரம் இவ்வுலகில் வாழ்ந்த சுவாமி விவேகானந்தரையும் அவரிலும் பார்க்க 39 வருடங்கள் அதிகமாக வாழ்ந்த மகாத்மா காந்தியையும் இவ்வுலகில் அறியாதவர்கள் சிலர் இருக்கக்கூடும். அறிந்தவர்களிலும் அதிகமாக அவர்களைப் பற்றித் தெரியாதவர்கள் பலர் இருக்கலாம்.

சமீபத்தில் ஒரு பத்திரிகையில் 'இந்தியாவில் புத்த பகவானுக்கு அடுத்தபடியாக அவதரித்த மகாபுருடர் மகாத்மா காந்தியே என ஒரு செய்தி என் சிந்தனையைக் கிளறி விட்டது. அதன் பயனாக, காந்தி இவ்வுலகிலிருந்து பிரியுமுன் பல வருடங்களுக்கு முன் தமது 39 ஆவது வயதில் எம்மைவிட்டுப் பிரிந்தவரும் காந்தியிலும் பார்க்க வயதில் ஆறு வருடங்கள் கூடிய வருமான 'விவேகானந்தரை மறந்து விட்டார்களா? அல்லது 'தெரியவில்லையா?' எனவும் 'தெரியாத்தனத்தால் மறந்து விட்டார்களா?' எனவும் எண்ணங்கள் என்னுள்ளத்தில் அச்சலச்சலாய் வந்து மோதின. முடிவில் காந்தியின் சரித்திரத்தையும் விவேகானந்தரின் சரித்திரத்தையும் மேய்ந்தேன். அதன் பெறுபேருக சுதந்திரன் வாசகர்களுக்கு இதோ இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கிறேன்.

## முன்னுரை

ஒரே காலத்தில் வாழ்ந்த இருபெரும் அவதார புருடர்களான மகாத்மா காந்திக்கும் சுவாமி விவேகானந்தருக்குமிடையில் எதுவித தொடர்பும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் நாட்டு மக்களைத் தயார்படுத்தும்பொறுப்பை யேற்று ஏதோ ஒரு சக்தியால் தூண்டப்பெற்று பாரத மண்ணில் அவதரித்தார்களென்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

'விவேகானந்தர் சமயவாதியாயிற்றே, அதிலும் துறவியாயிற்றே, அவர் அரசியலில் ஈடுபடவில்லையே, சுதந்திரத்திற்காகப் போராடியிராரே' என்றெல்லாம் பலர் சந்தேகப்படலாம். ஆனால் இந்தய நாட்டின் சுதந்திரம் மத நடவடிக்கைகளுடனும் பின்னிப் பிணைக்கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தால், நமது கற்பனைக்கும் எட்டாத தெய்வச் செயலால் சில கருமங்கள் நடைபெற வேண்டியிருந்ததையும், அப்படியே நடந்ததையும் ஆங்காங்கே காணக்கூடியதாக இருந்தமை மேற்கூறிய இருவருக்கும் ஆத்மீக தொடர்பு இருந்திருக்கலாம் என்பதையே வலியுறுத்துகின்றன.

இருப்பினும், மகாத்மாவின் சத்திய சோதனையில் ஒரே இடத்தைத்தவிர வேறு எவ்விடத்திலும் சுவாமி விவேகானந்தரைப்பற்றி ஒரு வார்த்தைதானும் நான் கண்டதாக ஞாபகமில்லை. அதே போல் விவேகானந்தரின் சரித்திரத்திலும் காந்தியைப்பற்றி எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுகாலவரை யாரும் இவ்விரு மகாபுருடர்களுக்குமிடையில் ஒரு இணைப்புப் பாலத்தையும் அமைத்ததாகத் தெரியவில்லை. அந்தக் குறையை ஓரளவிற்கு இந்தக் கட்டுரை பூர்த்திசெய்யுமென நம்பலாம்.

பல ஆயிரம் வருடங்களுக்குமுன்பே நமது முன்னோர்கள் 'அடியையும் நுனியையும் காணமுடியாதென்றும் 'ஆதியும் அந்தமும் இல்லை' என்றும் சொல்லிவைத்தனர். ஆகவே, இதுதான் உலகம் என்று நாம் எண்ணுமல் நமது கற்பனைக்கும் எட்டாத தூரங்களில் பூமியைப் போல் பல கோள்கள் இருக்கலாமென்பதையும் பல சூரிய சந்திரர்கள் இருக்கலாமென்பதையும் நம்பலாம். முடிவில்லா அண்டவெளியில் என்ன என்ன அதிசயங்கள் இருக்கின்றனவோ யாரறிவார்? 'கடவுள் எங்கும் இருக்கிறார்' என்பர் சிலர், எங்கேயும் காணவில்லை' என்பர் பலர். ஆனால் கடவுள் நம்பிக்கையுள்ளவன் சரியானமார்க்கத்தைக் கடைப்பிடிக்கும்போது கடவுள் உதவி அவனுக்குத் தேவையாக இருக்கும்போது நிச்சயமாக அது கிடைத்தே தீரும்' என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

'கடவுள் பலரறிய ஏன் நேரிலே தோன்றுகிறாரில்லை' எனச் சந்தேகப்படுவோர் ஒரு உண்மையை உணர மறுக்கிறார்கள். எக்காரணங்களுக்காக இந்த உலகங்கள் உண்டாக்கப்பட்டனவோ அதற்கு அர்த்தமே இல்லாது போய்விடலாம். 'கடவுள் எல்லாவற்றையும் படைத்தாராஞல்கோழியையா முட்டையையா முதலில் படைத்தார்'' எனச் சிலர் வேடிக்கையாக வினவினாலும் அந்தக் கேள்வியிலேயே சிருஷ்டி கர்த்தாவின் மறைவிற்கான விடையையும் நாம் காணக்கூடியதாகவிருக்கிறது. கோழியின் சரித்திரத்தை இதுவரை யாரும் எழுதியிருப்பதாகத் தெரியவில்லை.

அவை தாமாகவே படைப்புத் தொழிலை நடத்தி தம் இனத்தைப் பெருக்கி வாழக்கூடியதாகச் சேவலையும் படைத்து அத்துடன் அத்தொழிலைப் படைத்தவன் கைவிட்டிருக்கலாம். இத்தொழிலைக் கடவுள் தான் செய்தாரா? அல்லது அவரின் கீழ் இன்னும் [illegible] தேவர்கள் இருந்து இந்தத் தொழில்களைப் பார்த்தார்களா? என்பதும் சிந்தனைக்குரியதே. தானாகவே இயங்கக் கூடியதாகவும் அவரவர் செய்த கர்மபலன்களை அவரவர்கள் அடையக்கூடியதாகவும் வழிகள் வகுத்தபின் கடவுள தூரவிலகிச் சென்றிருக்கலாம்.

இயற்கையின் அற்புதங்களை நாம் எண்ணிப்பார்க்கும்போது மனிதர்களிடம் மாத்திரமல்லாமல் சில விலங்குகளிடத்தும் பறவைகளிடத்தும் இயற்கையாக அவற்றிடம் அமைந்துள்ள திறமையைப் பார்த்து நாம் அதிசயிக்கவேண்டியுள்ளது என்னவோ கடவுள் நம்பிக்கையற்றவர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மைதான். உதாரணமாக பறவைகளில் மிகவும் தந்திரசாலியாகக் காகத்தைப் படைத்தவன் 'வல்லவனுக்கு வல்லவன்' என்பதுபோல் காகத்தை ஏமாற்றுவதற்கும் தன்னினத்தைக் காப்பதற்கும் குயிலைப் படைத்ததும் தற்செயலாக ஏற்பட்ட சம்பவமென எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லையே.

தன் இனத்தைப் பெருக்க வல்லமையற்ற குயில். தம் இனத்தைப் பெருவாரியாகப் பெருக்கி வைத்திருக்கும் தந்திர மிக்க காகத்தை ஏமாற்றுவதென்பது எப்போதும் இருந்துவரும் நாடகமாகத்தானே இருக்கிறது. சரி இனி விஷயத்திற்கு வருவோம்.

## காலம் (1)

பத்தொன்பதாம் நூற்றுண்டு அது. உலகமனைத்தும் உறங்கிக் கிடக்கும் இந்தியா பற்றி ஏளனமாகப் பேசப்பட்டு வந்த காலம் அது. 'இந்தியரா?' அவர்கள் அடிமைகள். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சு மக்களுக்கும் ஏன் சின்னஞ்சிறு நாடான போட்டுக்கீசுக்கும் அடிமையானவர்களே இந்தியர். 'இந்துமதமா?' கேவலம் வெறும் பொம்மை வணக்கம்.'

இப்படியாக உலகமெல்லாம் அபிப்பிராயம் பரவியிருந்த காலம் மாத்திரமல்லாமல் இந்தியர் சென்ற இடமெல்லாம் அவமதிப்புக்குள்ளான காலம் அது. தென்னுபிரிக்காவில் இந்தியர் தம் சொந்த நாட்டிலேயே ஆங்கிலேயரால் இழிவாக நடாத்தப்பட்ட காலம் அது. தென்னுபிரிக்காவிலே காந்தி இரயிலில் மேல் வகுப்பில் பிரயாணம் செய்ததும் அதனுல் ஏற்பட்ட விளைவுகளைப் பலர் அறிந்திருந்த போதிலும் அதே காலத்தில் இந்தியாவில் அதே போல் சுவாமி விவேகானந்தருக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சிலர் அறியாதிருந்தனர் [illegible] சமயம் மேல் வகுப்பில் பிரயாணம் செய்துகொண்டிருந்த விவேகானந்தரை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கு அரும்பாடுபட்ட வெள்ளையர் ஒருவர்தோல்வி கண்ட சம்பவம் மிகவும் சுவையானது. ஆனுல் மகாத்மாவின் மேனியில் தொட்டது போல் சுவாமியின் மேனியில் தொட எந்த வெள்ளையரும் முன்வரவில்லை. அதற்குப்பதிலாக பின்னுல் பல வெள்ளையர்கள் அவரின் பக்த கோடிகளாயினரெனின் சுவாமியின் மகிமையைப் பற்றி இங்கு அதிகம் கூறத்தேவையில்லையென்றே கருதுகிறேன்.

## தண்டனை (2)

இந்தியா அந்நியரிடம்அடிமைப்பட்டுகேவலநிலைஅடைந்ததற்குக் காரணம்ஒற்றுமையின்மை என்பது ஒரு புறமிருக்க நாட்டிலே அதர்மம் தலைதூக்கியிருந்ததே சரியான காரணம் எனலாம். சமீபத்தில் ஜெர்மனியும், ஜப்பானும் தங்கள் அநீதியான போக்கினுல் தங்கள் நாட்டை அடிமையாக்கி இழிவடைந்தது போல் அக்காலத்தில் இந்தியாவில் நடந்த அதர்மங்களே அந்நியராட்சிக்கு வழியமைத்தன.

கொலை செய்தவன், திருடியவன், கற்பழித்தவன் எனப் பல்வேறு குற்றவாளிகள் சிறைவாசம் அனுபவிப்பதுபோல் நாடுகளும் தாம் செய்யும் குற்றங்களுக்காக அடிமைவாசம் அனுபவிக்கின்றன போலும்.

தம்மினத்தில் ஒரு சாராரை அடக்கி ஒடுக்கி அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய சாதாரண உரிமையைத்தானும் கொடுத்து வாழமுடியாதவர்கள் பல்லாயிரக்கணக்கான மைல் தூரத்திற்கப்பால் இருந்துவந்த அந்நியருக்கு அடிமைப்பட்டதில் நியாயமிருப்பதாகவே தெரிகிறது.

குற்றம் செய்தவன் பல வருட சிறைத்தண்டனை அனுபவிக்கும்போதே தான் செய்த தவறை உணர்ந்து திருந்தினுல் அவன் சுதந்திரமாக வெளியேறியதும் மீண்டும் அதே குற்றங்கள் செய்யாதிருக்கலாம். அதேபோல் பல வருடகாலம் அந்நிய ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த நாடு சுதந்திரமடையுந் தருவாயில் சுதந்திரத்திற்காக நாட்டைத் தயார்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அந்நேரத்தில் நமக்குத் தெரியாமலே நம்மை ஆட்சிபுரியும் சக்தியின் பிரதிநிதிகளாகச் சிலர் தேவையான நாடுகளில் அவதாரம் எடுக்கிறார்களென எண்ணத்தோன்றுகிறது. பல நாடுகளின் சரித்திரங்களைப் புரட்டிப் பார்க்கும் போது அப்படி எண்ணுவதில் தவறில்லை என்றே தோன்றுகிறது.

இந்தியாவிலும் இலங்கையிலும் தீண்டாமையென்னும் கொடியவியாதியால் பீடிக்கப்பட்ட மக்கள் தங்களில் ஒரு சாராரை அடிமைகளிலும் கேவலமாக நடத்தி வந்தனர் என்பதும் தெரிந்ததே. புனிதமான இந்து மதத்தில் நம்பிக்கையுள்ள மக்களிடையே கூட இந்தக் கொடிய வியாதி எப்படியோ பரவியிருந்தது. அது மாத்திரமல்லாமல் விஷ்ணு பக்தரென்றும் சிவபக்தரென்றும் கோஷ்டி கோஷ்டியாக வேறு பிரிந்து வாழ்தனர், சண்டையிட்டனர். மடிந்தனர். சுதந்திரமாக வாழ்வதற்குத் தகுதியற்றிருந்தனர், அடிமையாகினர். இது இயற்கை கொடுத்த தண்டனை.

## அவதார புருஷர்கள் (3)

இந்தியாவைச் சிறையிலிருந்து மீட்குமுன் மக்களைச் சுதந்திரத்திற்காகத் தயார் செய்வதற்காக அவதாரஞ் செய்தவர்களில் விவேகானந்தரும் காந்தியும் குறிப்பிடக்கூடியவர்கள். விவேகானந்தர் அவதரித்த அதே காலத்தில்தான் காந்தியும் அவதரித்தார்' இருவர் ஜனன தினங்களுக்குமிடையே உள்ள காலம் ஆக ஆறு வருடங்கள்தான்.

''விவேகானந்தர் ஒரு துறவி, தூய பிரமச்சரியத்தைக் கைக்கொண்டவர். அரசியலில் ஈடுபடாதிருந்தவர், ஆனுல் தாய்நாட்டில் மிகுந்தபற்றுடையவர்தான். ஆனுல் சுதந்திரத்திற்காக எதுவும் செய்ததாகத் தெரியவில்லையே' என்போரும் உண்டு. அது தவறு. தாய்நாட்டிற்காகவும் இந்து மதத்திற்காகவும் தம்உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்ய மக்கள் தயாராகவேண்டுமென அவர் ஆங்காங்கே கூறியதிலிருந்தே நாடுசுதந்திரமடையவேண்டுமென்ற ஆவல் அவர் உள் மனதிலே சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனுலும் சுதந்திரத்திற்காக அவர் போராடவில்லை. ஒரு துறவியிடம் அதை நாம் எதிர்பார்க்கவும் முடியாது. தூங்கியிருந்த மக்களை குறிப்பாக இந்துக்களை விழிப்படையச் செய்ததுடன் இந்தியாவின் பெருமையையும் இந்துமதத்தின் உயர்வையும் உலகறியச் செய்ததோடு இராமகிருஷ்ணர் மதத்தையும் மேல் நாடுகளில் பரப்பினுர் என்பதை அறியும் போது 'உண்மையாக இப்படியும் நடந்திருக்குமா? என்றே எண்ணத் தோன்றும். ஆனும் வர்க்

## ந. அனந்த தேவன்

(9-ம் பக்கம் பார்க்க).

> காந்திஜி நூற்றுண்டு விழா இப்பொழுது நாடெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. இம்மாதம் 12 ம நாள் சுவாமி விவேகானந்தர் ஜயந்தி தினமாகும். இந்திய மககளின் அரசியல் எழுச்சிக்கு வித்திட்ட அண்ணல் மகாத்மாவையும் இந்துமதப்புரட்சிக்கு வித்திட்ட சுவாமி விவேகானந்தரையும் ஒப்பிட்டு நோக்கி இங்கு ஆராய்கிறுர் கட்டுரையாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் நடைபெற்ற நாடக விழா



## மன்னார் எம்.பி.யின் புத்தாண்டு வாழ்த்து

புத்தாண்டு பிறந்ததுவே
புனர் வாழ்வு தந்திடவே
பித்தராம் நாமெல்லாம்
வனப்புடனே வல்லபரன்
ஆசியையே வேண்டி
நிற்போம்
காசினியில் அவனன்றி
வேறுதவி யாருமில்லை
பேறு பெற்ற மன்னவனின்
பதமலரை நாடி நின்றால்
வினை தீரும் செல்வம் வரும்
சதமென்று அவன் பாதம்
நினைந்திடுவாய்
மடநெஞ்சே.

—வீ. ஏ. அழகக்கோன்
மன்னார்.

தமிழ் நாடகங்களைத் தொடர்ந்து ஏழு நாட்களுக்கு இலவசமாகப் பார்த்து மகிழக் கூடிய வசதியை 'நிழல்' பத்திரிகையின் சார்பில ஏற்பாடு செய்திருந்தார்கள். கொழும்பில பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில நடைபெற்ற இந் நாடக விழாவின் சகல ஏற்பாடுகளையும் இலங்கை முன்னணி நடிகர் திரு. ரகுநாதனும 'நிழல்' ஆசிரியர் திரு. இ. பிரேமகாந்தனும் செய்திருந்தார்கள்.

ஈழத்தின் பிரபல நாடக மன்றங்கள் ஒருங்கு சேர்ந்து நல்ல முறையில் இந்நாடக விழா அமைய ஒத்துழைத்தன என்றால் மிகையாகாது. 18. 12. 68 ல் முதல் நாள் நிகழ்ச்சியாக 'சிவசக்தி கலையரங்கின் 'ஆகாயப் பயணத்தின் அபாயம்' என்ற நகைச்சுவை இசை நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இந்த நகைச்சுவை இசை நாடகத்தில் யமதர்மராஜனாக எஸ். சிவத்தொண்டன, நலகண்டமாக சி. எஸ். அருள்பிரகாசம், சித்திர புத்திரராக எஸ். விசுவரத்தினம், தர்மராணியாக எம. சுவாமிநாதன், நாரதராக எஸ். சரவணகுமார், ஹிங்கரராக எப். ரி. பெருமாள், கே. அன்னலிங்கம், என் கருணாநிதி ஆகியோரும் மன்மதராயனாக எம். ஜெயபாலசிங்கமும் தோன்றி நடித்தனர். ஏ. வீ. பாலசுப்பிரமணியமும், எஸ். சிதம்பரநாதனும கதா காலட்சேபம் செய்தார்கள்.

பூவுலகத்தில் நடைபெறும் அட்டூழியங்களையும் பூவுலக மக்கள் தேவலோகத்தவர்களையும் மதிக்காமல் செயற்கை மதி போன்றன வற்றில் தம் இச்சைப்படி சுற்றித்திரிவதையும் தர்மராணி பூவுலக மானிடன் ஒருவனைக் காதலித்ததையும் கண்ட இயமன் துக்கம் தாழாது பென்சன் எடுக்கிறார். அதாவது தமது பதவியில் இருந்து ரிடையர் ஆகிறார். இதுதான் முதல் நாடகத்தின் கதை. தர்மராணிக்கு வேடமிட்ட ஆண் மிகவும் நன்றாக உடம்பை நெளித்துக்குலுக்கி மினுக்கி அசல் பெண்களைவிடத் திறமாக நடித்தார்.

கதை, வசனம்,பாடல்களை ஆர். ஜெகசோதி இயற்றியிருந்தார். அவரது, 'மிஸ்டர் கேட்......' என்ற பாடலும் தர்மராணியின் ஆட்டமும் பலே பிரமாதம். ஏனைய நடிகர்களும் குறைவு படாமல் செய்தார்கள்.

இயமனுக்கு உருவம் இருந்தபோதும உற்சாகம் போதாது. மேடையில் இன்னும் நாலுதரம் துள்ளி மிதித்திருக்கலாம். காட்சி அமைப்பை தெ. ஆறுமுகசாமியும், எஸ். சிவானந்தனும் செய்திருந்தார்கள். ஐ. இருதயஆனந்தன், எஸ். பரமனுதன், எஸ. எம். சந்தானம், ஜெவ்றிசெல்லையா, ராஜன் ஆகியோர் பக்க வாத்தியம் வாசித்தனர்.

மொத்தத்தில் முதல்நாள் நாடகம் சோடை போகவில்லை.

### ஊர் சிரிக்கிறது

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக 'ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தின் 'ஊர் சிரிக்கிறது' என்ற நாடகம் நடைபெற்றது. இது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல தடவைகள் மேடையேறிய நாடகம்.

சின்னமாமாவாக நடித்த திரு. இராஜரத்தினம் திடீர் திடீரென்று பல புதியபகிடிகளை விட்டு அடிக்கடி சபையோரைச் சிரிக்கவைத்தார்.

திரு. பத்மனுதனும், செல்வநாயகமாக நடித்தவரும், பொன்னம்பலமாக நடித்தவரும் கிளாக்கரும் மிக அபாரமாகச் செய்தார்கள். செல்வநாயகம், பொன்னம்பலம் இருவருடைய குடும்பத்திலும் திருமணம் பேசி உறவை இணைப்பது தான நாடகத்தின் நோக்கம்.

ஒருகால் எமது இலங்கைத் தமிழ்த் தலைவர்களைப் பற்றிய கதையாக இருக்கலாமோ...என்ற ஐயுறவு ரசிகர்களுக்கு எழுந்திருக்கலாம ஆனால் நாடகததில் அப்படி எதுவும் புலப்படவில்லை(?)

மொத்தத்தில்' ஊர் சிரிக்கிறது' எல்லோரையும் நன்றாகச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது.

### சலோமி

20. 12. 68 மூன்றும் நாள் நிகழ்ச்சியாக இலங்கையில் ஒரு துருவ நட்சத்திரமாகத் திகழும லடீஸ் வீரமணியின் 'சலோமி' என்றநாடகம் நடைபெற்றது.

சலோமியாக, பெய்ரூட் சென்று நடனமாடிப் புகழடைந்த ஈழத்துப் பட நடிகை சந்திரகலா தோன்றினார். அசல் 'ஹாலிவுட்' நடிகைகளின் அரை நிர்வாணமான சரிகை பறக்கும் உடைகளிலே தோன்றினர். அவரது 'சலோமி' என்ற பாத்திர அமைப்பு அப்படி. ஆங்கில நடிகை எலிசபெத் டெய்லரும் இப்படித்தான் தோன்றுவார்.

அனேக ரசிகர்கள் அத்தகையதோர் 'சலோமி'யின் தோற்றத்தையும் அழகு நளினத்தையும் ஆட்டத்தையும் தமிழ் நாடக மேடையில் அன்றுதான முதல்முதலாகக் கண்டிருப்பார்கள என்றாலும் வியப்பதற்கில்லை.

மதுவிலும் மங்கையிலும் மயங்கும மன்னனாக லடீஸ் வீரமணி தோன்றி மிகவும் சுறுசுறுப்பாகவும் தத்ரூபமாகவும் நடித்தார். ஞானியாக கலைச்செல்வன் தோன்றினர்.

இது நடைபெற்ற ஒரு பழைய கிரேக்கக் கதை. எனவே நாடகம் நன்கு சோபித்தது. சினிமாப் புகழ் மொகமட் சாலியின் இசையமைப்பு மனதைக் கவர்ந்தது. மற்றும் மஞ்சுளா, எம். எம். ஏ. லத்திப, ஏ. செல்லையா, பி. எம். சேகர், ஸ்டீபன், பெனடிக், ராஜா, லாரன்ஸ், அம்சா, அமிர்தீன், மணிமேகலை, ராணி, எல். ஜெயபால், எஸ். ஜோசப் ஆகியோர்தோன்றி நடித்தனா. அனைவரும் பண்பட்ட நடிகர்கள் போன்று திறம்படச் செய்தனர். கே. சுப்புவின் ஒப்பனையும், கே. எஸ். நாதனின் உடையலங்காரமும் பிரமாதம்.

பல புதிய உத்திகளைக் கையாண்ட 'சலோமி' நாடகம் ஒரு நல்ல வெற்றி நாடகம் என்றுதான் சொல்லவேண்டும். மொத்தத்தில் 'சலோமி' எல்லோருடைய நினைவிலும் நிற்கிறள்.

### பார்வதி பரமசிவம்

21-12-68 நான்காம் நாள் நிகழ்ச்சியாக சிலோன் சேவா ஸ்டேஜ் தயாரித்த 'பார்வதி — பரமசிவம்' என்ற நாடகம் நடைபெற்றது. இதுவும் முன்னர் மேடையேறியதே.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏழைத்தாயின்மகன்ஒருவன் கொழும்புக்கு டாக்டருக்குப் படிக்க வந்து காதலில் சிக்குண்டு படிப்பையும் மறந்து பினனர் காதலியால் ஏமாற்றப்பட்டுக் குடிக்கு அடிமையாகி மாண்டுபோவதைச் சித்திரிப்பதுதான் பார்வதி—பரமசிவம்.

மாமனார் பரமசிவமாக ரி. ராஜகோபாலும் சேக்ஷ்பியர்பிரியரும்ரிடையர்சிறுப்பருமாக எஸ். ராம்தாஸும் தோன்றி அபாரமாக நடிக்கின்றனர்.

வில்தான் ஆண் பெண் வேடம் போட்டு அருமையாக நடித்தார் எனலாம். கதை வசனம் டி. கிருஷ்ணமூர்த்தி என்றிருந்தது. ஆனால் நல்லதொரு யாழ்ப்பாணத்துக் கதையை எதிர்பார்த்தவர்களுக்கு முகத்தில் அசடு வழிந்தது. 'ஆராமுது அசடில்லை' என்றால் ரசிகர்கள் மட்டும் அசடுகளா?

இந்நாடகத்தில் நடிகர்களாக ரி. ரகுநாதன், ஏ. பிரான்சிஸ், ஏ. ரி. பொன்னுத்துரை, எஸ. ஜே. யோசப்பு, க. ஞானபண்டிதன், ஆர். அன்னப்பா, ஐ. செல்வரத்தினம், ஏ. கணபதிப்பிள்ளை, ச. தில்லைநாதன் வே. மண்டலேஸ்வரன், ச. நடேசபாதன், கு. ஜெயபாலசிங்கம், சு. நவரத்தினம் ஏ. மகேஸ்வரன் ஆகியோர் தோன்றினர். இவர்களில் சிலர் இன்னும் மேடைக்குப் புதியவர்கள் போலத் தோன்றினர்.

## எமது விமர்சனம்

செல்வி சரோஜா ராமு, திருமதி கே. சுப்புலட்சுமி, என். துரைராஜா, எஸ். செல்வசேகரன், எவ். ஹிலேரியன், கே. வி. எஸ் மணியம், சி. நடராஜசிவம, ஆர். காசிநாதன், எம். சண்முகநாதன் ஆகியோர் மேடையில் தோன்றினார்கள். அனைவரும் மிக நன்றாகவே செய்தார்கள். செல்வி சரோஜா தாயாராகவும் காதலியாகவும் தோன்றினர். தாயார் பாத்திரந்தான் பொருத்தமாக இருந்தது. கே. எம். வாசகரின் கதைவசனம். கருத்தாழம் நிறைந்திருந்தது. இந்த நாடகமும் ரசிகர்களின் அமோகமான பாராட்டுதலைப் பெற்றது—

### ஆராவமுது அசடா?

22-12-68, 5ம்நாள்நிகழ்ச்சியாக யாழ்ப்பாணத்து மறுமலர்ச்சி நாடக மன்றத்தினரின் 'ஆராமுது அசடா?' என்ற நாடகம் அரங்கேறியது. இந்த ஒன்றுதான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த நாடகம். ஆனால் அசல இந்திய நாடகம்போல, அதாவது பேச்சு வார்த்தைகளில் 'அணு?', முதலியார், அவடம் முதலிய சொற்பிரயோகங்கள் தொனித்தன. மொத்தத்தில் ஒரு இந்திய பாணி நாடகத்தை யாழ்ப்பாணத்தவர்கள் நடித்தார்கள் எனலாம்.

நாடகம் நன்றாகத்தான் இருந்தது. ஆராவமுதுவாக வந்தவரும், சித்தப்பா கணக்கப்பிள்ளையும் நன்றாக வெளுத்துக் கட்டினார்கள். இயற்கையாகவே பண்பட்டபழம் நடிகர்களைப்போல நடித்தார்கள். எஞ்சினியராக வந்தவர் சபையோரையே பார்க்கிறாரில்லை.

பானுவாக நடித்த ஆண் [illegible] 'ஆகாயப் பயணத்தின் அபாயம்' நாடகத்திற்கு அடுத்ததாக 'ஆராமுது அசடா?'

### அவனைக் கொன்றவள் நீ

23-12-68 ஆறும் நாள் நிகழ்ச்சியாக மாதவி கலாமன்றம் தயாரித்து சுபேர் ஹமீட் வெளியீடாக அரங்கேற்றிய 'அவனைக் கொன்றவன் நீ' என்ற துப்பறியும் மர்ம நாடகம் நடைபெற்றது.

இரகசியமாக நடைபெற்ற ஒரு கொலையைத் துப்பறிந்து கண்டு பிடிப்பதே இந்நாடகத்தின் கதையாகும். காட்சி அமைப்புகள் பிரமாதம். இந்நாடக நிகழ்ச்சிகள் யாவும் நுவரெலியாவில் உள்ள ஒரு பங்களாவில் நடைபெறுவது போலக் காட்டப்படுகின்றன. சிறந்த உடையலங்காரம்.

இதில் லக்ஷ்மியாக சூரியகுமாரியும் காதிந்கணேஷாக ஏ. ஜெயந்தியும், இன்ஸ்பெக்டராக கே. ஏ. ஜவாஹரும், சுரேஷ் ஆக ஏ. செல்வராசாவும், தலைவர் தர்மலிங்கமாக சி. எஸ். பரராசசிங்கமும், கணேசுவாக எம். ஹுசைன் பாருக்கும் தோன்றி நடித்தார்கள். கலைநிர்வாணியாக கதிர்காமத்தம்பியும், ஒலியமைப்பாளராக இக்பாலும், ஒப்பனையாளராக முகமட் மர்துக்கும், இசையமைப்பாளராக முகமட் சாலியும் ஒளியமைப்பாளராக வி. வாமதேவனும் கரும மாற்றி நாடகத்தின் வெற்றிக்கு உதவினர்.

வாமதேவன் ஒளியமைப்பும், முகமட் மர்துக் ஒப்பனையும் முகமட் சாலி இசையையும் கையாண்டனா.

பல புதிய முறைகளைக் கையாண்ட ஒரு நல்ல தமிழ்த் துப்பறியும் நாடகம் இது. காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பாக இருந்தது. நல்ல துப்பறியும் நாடகங்களைத் தமிழில் ஆக்கலாம் என்பதற்கு 'அவனைக் கொன்றவள் நீ' ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

### சாணக்கியன்

கடைசி ஏழாம் நாள் நிகழ்ச்சியாக எஸ். பொன்னுததுரை எழுதிய 'வலை' என்ற வானொலி நாடகத்தைத் தழுவி மேடைக்கென அமைத்து கலாஜோதி 'சானு' தயாரித்த 'சாணக்யன்' என்ற நாடகம் நடைபெற்றது.

இதில் மகதத்தின் மாமந்திரி சாணக்யனாக ஆர். அம்பலவாணர், தட்சசிலத்தின் சேனாதிபதி அஜாந்த சத்ருவாக எஸ். ஐ. எம். ஏ. ஜபார், பிந்துசாரனின் மூத்தமகன் சுசிமனாக ரி. ராஜேஸ்வரன், பிந்துசாரனின் இளையமகன் அசோகனாக ஏ. ரகுநாதன், புத்த பள்ளிவாழ் காருவகியாக சுப்புலட்சுமி காசிநாதன், புத்த பிக்கு உபகுப்தராக ஏ. மகேந்திரன் ஆகியோர் தோன்றி நடித்தனர். மற்றும் ஆர். எஸ். சோதிநாதன், எம். ரி. பெருமாள், ஆர். ராஜரத்தினம், எஸ். திருநாவுக்கரசு ஆகியோரும் தோன்றினர். திரைப்பட நடிகர் ஏ. ரகுநாதன் தமது பாகத்தைத் திறம்படச் செய்திருந்தார். மற்றவர்களும் சோடை போகவில்லை.

### கொள்ளைகொண்ட இரு நாடகம்

ஏழு நாள் நிகழ்ச்சிகளிலும் 'சலோமி'யும் 'சாணக்யன்' நாடகமும் அனேகரது மனத்தைக் கொள்ளை கொண்டன.

தமிழகத்தில் மார்கழி மாதத்தில் சென்னையில் 'இசை விழா' நடப்பது போன்று எமது ஈழத்திலும் மார்கழி மாதத்தில் நாடக விழா இனிமேல் தொடர்ந்து நடைபெறவேண்டும். இதற்கான திறவுகோலை 'நிழல' குழுவினர் காட்டியிருக்கிறார்கள்.

—நெல்லை க. பேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5வது வாரமாக் காட்சியளிக்கிறது!

கிங்ஸ்லி (கொழும்பு)



நடிகர் திலகம்

★ சிவாஜிகணேசன்

தேவிகா


—நடிக்கும்—

# நீல வானம்

## இப்பொழுது காட்சிதருகிறது!

லிடோ (பொரளை)

ஜனாதிபதி பரிசு பெற்ற சித்திரம்! (தகழி சிவசங்கரப்பிள்ளையின்)



# செம்மீன்

## 24வது வாரம்!

பிளாசா (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்நகர்)

# சங்கம்

## 3வது வெற்றி வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு)

* எம். ஜி. ராமச்சந்திரன் —நடித்த,

# அலிபாபாவும் 40 திருடர்களும்

## 4-வது ஜனத்திரள் வாரமாக காட்சி தருகிறது!

சென்ட்ரல் (மருதானை) — நவா (கொபனி வீதி) — ராணி (யாழ்நகர்) — ராஜேஸ்வா (மட்டக்களப்பு)

ஜோதி (திருமலை) — லிபர்ட்டி (ஹட்டன்) — றெக்ஸ் (பதுளை) — ஆனந்தா (கம்பளை)

'நடிகர் திலகம்'

* சிவாஜிகணேஷன் * சரோஜாதேவி

★ நாகேஷ் ★ பாலாஜி ★ சுந்தரராஜன் ★ வி. கே. ராமசாமி


★ சுந்தரிபாய் ★ ராஜசுலோசனா —மற்றும் பலர் நடித்த—

சுஜாதாவின்

# என் தம்பி

இசை: எம். எஸ். விஸ்வநாதன்

டைரக்ஷன்: ஏ. சி. திரிலோகச்சந்தர் M.A.



### எதிர்பாருங்கள்!!

ஜெய்சங்கர், டி. கே. பகவதி, எஸ். வரலட்சுமி, நாகேஷ், நம்பியார், கிருஷ்ணகுமாரி, ஆகியோர் நடித்தகே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# உயிரா? மானமா?

## 4-வது வீரமிக்க வாரம்

செல்லமகால் (கொழும்பு) — ஈரோஸ் (பாமன்கடை) — இம்பீரியல் (மட்டுநகர்) — நெல்சன் (திருமலை) — வின்சர் (யாழ்நகர்)

புரட்சி நடிகர் * எம். ஜி. ஆர்.

கவர்ச்சி நடிகை * ஜெயலலிதா

* நம்பியார் * அசோகன் * நாகேஷ்

மற்றும் பலர் நடித்த

# ரகசியப் போலீஸ் 115

(ஈஸ்ட்மன் கலர்)



★ ★ ★ ★ ★

**விரைவில்:** சிவாஜிகணேசன், ஏ.வி.எம். ராஜன், தங்கவேலு, நாகேஷ், வி. கோபாலகிருஷ்ணன், ஜெயலலிதா, சோ, ராஜேஸ்வரி, சுந்தரிபாய், சீதாலட்சுமி, ஜோதிலட்சுமி

—நடிக்கும்—

# கலாட்டா கல்யாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ, இலக்கத்தில் 1969-வருடம் ஜனவரி மாதம் 10-ம் திகதி வெள்ளிகிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 22411